தென்றல்

~ ஆசிரியர்: கண்ணதாசன் ~

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 4 | சென்னை | 14-9-57 | சனிக்கிழமை | இதழ் 11

ஒரே நிலவு



அழகான சொற்களை நான் காதலிக்கிறேன் — என்றான் கீட்ஸ். பாரதியின் கவிதைகளிலே இந்த அழகான சொல்லடுக்குகள் புதுப்புது உணர்ச்சி நிறங்களை வழங்குகின்றன. தமிழ் அதற்குமுன் பெற்றிராத நல்லதோர் பொலிவைத் தேக்கிக் காட்டியோரில் பாரதி நிகரற்றவன்; கவிஞனை காலத்தின் நிழலாட்டம் என்பார்கள். ஆனால், பாரதி, காலத்தைக் கனிவித்தான்; காலம் பாரதியை உருவாக்கியது!

நல்ல கவிஞன் மொழிக்கு சிரஞ்சீவித்துவம் தந்துவிடுகிறான். கிரேக்கத்தின் மகோன்னத வாழ்வும் சரித்திரப் புகழும் பழங்கனவாய்ப் போன பின்பும் ஹோமரின் காவியங்கள் இன்று உலகெங்கும் போற்றப்படுகின்றன. அரசியல் பிரளயத்திலே உருமாறிப்போன ஜெர்மனியின் அந்த நாளைய மேன்மை, கதேயின் இலக்கியங்களில் இன்றும் இளமையோடுதான் வாழ்கின்றன.

பிளாட்டோ போன்ற சித்தாந்திகள் கவிஞனை பொய்மையின் மொழிபெயர்ப்பாளராகச் சித்தரித்திருந்தும் கவிதையின் போகன விழைவை - வற்றாத ஜீவத் திளைப்பை சமுதாயம் மறந்துவிடவில்லை.

தமிழகத்திலே பாரதி ஒரு 'தோற்றுவாய்'. கடவுளையும், பக்தியையும் பாடிய இடைக்காலப் புலவர்களின் பாணியிலிருந்து பாரதி வேறுபட்டவன்; ஆனால் இருந்து சென்ற முன்னோர்களைச் சில வேளைகளில் பின்பற்ற வேண்டிய சிக்கலான தன்மையிலே பாரதி வாழ்ந்த காலம் வலிமை பெற்றிருந்தது! பழமையும், புதுமையும் பொங்குண்டு கொப்பளித்த ஒரு சங்கமத்திலே பாரதி வாழ்ந்து மறைந்தான்.

முழுக்க முழுக்க பக்தியையே பாடிக்கொண்டிருக்க அவன் பழைய நூற்றாண்டிலே பிறக்கவில்லை; பழுதற்ற மக்கள் கவிஞனாக மாறுதலுக்கு நீண்ட நாட்கள் பாரதி வாழ்ந்திடவுமில்லை. எத்தனையோ ஒளி நிரம்பிய காவியங்களை பாரதியிடமிருந்து தமிழகம் பெற்றிருக்க வேண்டும்.

முப்பத்தி ஒன்பது வருடங்களிலே அந்த நாத ஒலி பிறந்து, கவர்ச்சியோடு ஒலி வீசி அமைதி பெற்றுவிட்டது. அந்த சின்னஞ்சிறு நாடகத்தின் இறுதி அங்கத்தைப் புரிந்துகொண்டவன்போல, பாரதி நிறைய எழுதிக் குவித்தான்; காவியங்கள், வசன கவிதைகள், கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள், பல் சுவைப்பாடல்கள்...இப்படி வாழ்வின் எந்தத் துறையில் தொட்டாலும் அவனது 'மேதாவிலாசம்' பளிச்சிட்டது. பிறரிடம் காணாத புதுமை இது. முன்பிருந்தோரெல்லாம் ஒரே சுருதியில் பாடியிருந்தபோது, பாரதி மட்டும் தனித்த பாணியோடு வித விதமான உணர்ச்சிச் சுழிப்புகளைக் கவிதையிலே படைத்தான். காலத்தையும், மக்களையும் மறந்துவிட்டு அவன் கவிதை பாடிடவில்லை. மாதம் மும்மாரி பொழிந்திடும் நாட்டையும், இந்திரன், சந்திரன் எனத்தகும் பூபாலர்களையும் பாரதி தமிழகத்திலே தரிசிக்கவில்லை. வாழ்வின் குரூரங்கள் அவன் முன்னே அணிவகுத்து நின்றன. ஆயிரம் சாதிகளாகப் பிரிந்து போராடும் மக்கள் குலத்தை பாரதி கண்டான். வேறு பலர் போல, உலாவும், தலபுராணங்களும் இயற்றி, போலிப் பெருமையைச் சித்தரிக்கவில்லை. நிலைகெட்டோரை நினைத்து 'நெஞ்சு பொறுக்குதில்லையே!' என்றான். சோற்றுக்கு வந்த பஞ்சம் கண்டு 'சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்!' என்ற ஆவேசப் புலம்பல் கவிதையிலே அடிநாதமிட்டது! இந்தக் குமுறல்-இதயத்தெளிவு-இழிவு கண்டு கொதிக்கும் பண்பு அத்தனையும் பாரதியை பூரணத்துவமாக்கின. எனினும் அவன் புதுமையும் பழமையும் அலைபுரண்டு மோதிக்கொண்ட, குழம்பிய வேளையின் நிலையான பிரதிநிதி. மொழியின் முழு வேகமும், அழகும் நளினமும் பாரதியிடம் விந்தையோடு அமைந்துகிடந்தன. அவன் கொள்கைகளில் காலம் விதைத்துப்போன 'பற்றாக்குறைகள்' நிறைந்திருக்கின்றன. ஆனால் அவை உண்மையான உள்ளத்தின் துடிப்புகள்.

'சென்றதினி மீளாது மூடரே! கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து குமையாதீர்!' என்றான். 'தின்று விளையாடி இன்புற்றிருந்து வாழ்வீர்! தீமையெலாம் அழிந்துபோம்!' என்ற உறுதி பளிச்சிடும் உணர்வுக்கு அவன் கவிதைகள் முழக்கமாயின.

புதிய சேதியை அவன் விடுத்தான், துணிவாக-புயலின் வேக நடை சலவையிட.

'செத்தபின் சிவலோகம் வைகுந்தம் சேர்ந்திடலாமென்றே எண்ணியிருப்பார்! பித்த மனிதர் அவர் சொல்லும் சாத்திரம் பேயுரை என்று சங்கம் முழக்கினான்.

வர்ணாஸ்ரம தர்மத்தை 'சூதுப் பிரிவுகள்' என நெஞ்சம் எரிய சபித்தான் பாரதி.

"எத்தனை கடவுள்கள்! செவ்விதழ் பெண்ணும்! சிரத்திலே கூத்தியாம்! அந்தத் திருவாளனுக்கு இரு பிள்ளைக் கடவுளர்களாம்! இதெல்லாம் மனிதனின் அழகான கற்பனை. காவிய மேன்மைக்காகப் படிக்கலாமே தவிர, அவை உண்மையல்ல' என்ற கருத்திலே கவிதை பாடிய பாரதியை 'முற்றும் துறந்தவன்' என்று எப்படிச் சொல்வது?

பழமையின் ஆதரவாளனை பாரதியின் குரலும் கூடவே கேட்கிறது:

"சிற்றெரும்பைப் பார்!"

எத்தனை சிறியது! அதற்குள்ளே கை, கால், வாய், வயிறு, எல்லா அவயவங்களும் வைத்திருக்கிறது; யார் வைத்தனர்?

மகாசக்தி..."

வாழ்வு முழுதும் துன்பத்தால் தொல்லைப்பட்ட அவனுக்கு விடிவின் பொன்னொளி தென்படவில்லை. நம்பிக்கையின் எல்லைக் கோடாக 'சக்தி' உதவினாள்! அந்த 'சக்தி விகாரம்' மட்டும் இல்லாதிருந்தால் பாரதி மிருகமாயிருப்பான்!

இலக்கியத்தின் கற்பு கெட்டுவிடாமல், செக்கு மாட்டு பாணியிலே கவிதை எழுதியோருக்கு பாரதி விரும்பத்தகாதவன். இதய உணர்ச்சிகளே அவனிடம் கவிதையாக வடிவம் பெற்றன. இருண்ட தமிழுக்கு விளக்கேற்றி வைத்த பெருந்தகை பாரதி. உலகத்தில் எந்தப் பகுதியில் புரட்சி தெறித்தாலும் பாரதி வாழ்த்தினான்.

ஆகாவென்றெழுந்த யுகப் புரட்சியில் கொடுங்கோலன்

— 8ம் பக்கம் —

நொண்டி நாய்

சிறுகதை

இந்தோ சிலோன் துரித வண்டியின் வரவை காரைக்குடி புகைவண்டி நிலையம் கண கணவென்ற மணியொலியின்மூலம் அறிவித்துக்கொண்டிருந்தது. 'சாம்பார் சாதம், தயிர்சாதம், வடை, முறுக்கு, அப்பம், விற்பனையாளர்களெல்லாம் 'டூட்டியில்' இறங்குவதற்குத் தங்களை தயார்படுத்திக்கொண்டிருந்தார்கள். வண்டியில் வந்து போவோருக்கு தண்ணீர் கொடுத்து தாகம் தணிக்கும் தள்ளாத வயதான அந்தத் தாத்தாவும் தண்ணீர் வண்டியைத் தள்ளியவாறு வந்துகொண்டிருந்தார். மூட்டை முடிச்சுகளையெல்லாம் தேடிப் பிடித்துக்கொண்டு வண்டிக்குள் நுழைவதற்குமுன் நடத்த வேண்டிய மகா பாரத போருக்காக தங்கள் தோள்களுக்கு 'ஜோர்' கொடுத்துக் கொண்டிருந்தனர் பிரயாணிகள். சிறிய வேப்பமரத்தின் கிழே சுருண்டு படுத்துக்கொண்டிருந்த ஒரு உயிர் 'வல்லரக்கா வண்டி வருது!' என்ற சொற்களைக் கேட்டதும் எழுந்து நிமிர்ந்து உடலை வளைத்துக் கொடுத்தவாறு வாலை உயர்த்தி ஆட்டிக்கொண்டு வண்டி வரும் திசையை நோக்கி நின்றது.

பயங்கரமாக ஓடிக்கொண்டிருந்த தொடர்வண்டி திக்குமுக்காடி, திணறித் திண்டாடி நீண்ட பெருமூச்சு ஒன்றை விட்டவாறு நிலையத்தில் வந்து நின்றது. 'பிரயாணிகளு'ள் பெரும்பான்மையினர் 'பிராணிகளாக' மாறிக்கொண்டிருந்த சந்தடியிலே 'சோளி'களும், சோளிகளை நாடிவந்த 'புஷ்கோட்டுகளும்' திருக்குறளின் மூன்றுவது பாலுக்கு முன்னுரை திட்டிக்கொண்டிருந்தன. அந்த கூட்டத்தின் இடையே "ஐயா! புண்ணியவான்களே! தர்மப் பிரபுக்களே! கோடிப் புண்ணியம் உண்டு சாமி! உங்க காலைப் பிடிச்சு கேட்கிறேன் சாமி! காலணு கொடுங்க சாமி! இந்த அனுதையைக் காப்பாற்றுங்க சாமி! நீங்க வெத்திலே போடுற காசு, இந்த ஏழைக்கு ஒருநேரம் ஆகாரம் ஆச்சு சாமி" என்று அவர்கள் வாழ்க்கையின் மூலமந்திரத்தை உச்சரித்தவாறு இரண்டு உயிர்கள் இரு கை ஏந்தி அலைந்துகொண்டிருந்தன. வாலைக்குழைத்தவாறு நொண்டி நொண்டி நடந்துவந்த வல்லரக்கன் கடைசிப் பெட்டியின் வாசலில் வந்து நின்றது. இந்த உலகத்தில் அந்த உயிரிடம்அன்பும் வாஞ்சனையும் காட்டுகின்ற நான்காவது உயிர் ஒன்று அந்த வண்டியில் நாள்தோறும் வந்து செல்லும். அதன் வரவைத்தான் அது எதிர்பார்த்து ஏங்கி நின்றது.

தொடர் வண்டியோடு இணைந்து வரும் உணவுப்பெட்டியில் (டைனிங்கார்) சமையல் செய்யும் கருப்பையா கையில் ஒரு ரொட்டியோடு வெளியே வந்து வல்லரக்கனைத் தடவிக்கொடுத்தவாறே, 'வீரப்பா சிவகாமி! வாங்க, வாங்க!" என்று அழைத்தான். 'இதோ வந்துட்டோம், மாமா!' என்று குரல் கொடுத்தவாறு கையேந்தி நிற்கும் 'கவுரவமான' தொழிலில் ஈடுபட்டிருந்த அந்த இரண்டு சின்னஞ் சிறுசுகளும் ஓடிவந்தன. கையிலிருந்த ரொட்டியை மூன்றுகப் புட்டு அந்த மூன்று உயிர்களுக்கும் கொடுத்துவிட்டு அவர்கள் சுவைத்துத் தின்பதைப் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தான் கருப்பையா. தாகித்து வருபவர்களுக்கு தண்ணீர் கொடுக்கும் தாத்தா சிரித்தபடியே 'கருப்பையா! உன்மேலே இதுக உயிரையே வச்சிருக்கு, நீ ஒரு நாள் வராட்டி இவங்க முகம் மட்டுமா, வல்லரக்கன் கூடயில்ல வாடுது. யாரோ சொன்னுங்க, ஏழைக்கு ஏழைதான் உதவ முடியும்னு! ஆம்மாம்பா நூற்றுக்கு நூறு உண்மை...ஆங் ஆங்! டேய் வீரப்பா, தட்டிவிடுரு; தினம் காலணு கிடைச்சாலும் கிடைக்காட்டியும் கருப்பையா புண்ணியத்திலே ரொட்டித் துண்டு நிச்சயம்... ஏ புள்ளே சிவகாமி, நீயும் வீரப்பனும் கல்யாணம் பண்ணிக்கினு முதல் பிள்ளை பெத்து கருப்பையான்னு பேரு விடு,' என்ருர். 'போங்க தாத்தா...' என்று சிணுங்கியபடியே பொய்க் கோபம் காட்டினுள் சிவகாமி. அனைவரும் சிரித்தனர்.

தொடர்வண்டியை வழியனுப்பி வைக்க மணியொலித்தது. அபாயச் சங்குபோல அலறியவாறு ஆடி அசைந்துகொண்டு வண்டி கிளம்பியது. அதுவரை சும்மா நின்றுகொண்டிருந்தவர்கள் வண்டியில் செல்பவர்களிடம் சமாச்சாரங்களைச் சொல்வதற்காக பிளாட்பாரத்தில் ஓடிக் கொண்டிருந்தனர். வண்டியிலிருந்தும் பிளாட்பாரத்திலிருந்தும் சில கைகளும் கைக்குட்டைகளும் காற்றில் அசைந்துகொண்டே கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டன. கடைசிபெட்டியைத் தொடர்ந்து வல்லரக்கன் நொண்டிக்கொண்டே பிளாட்பாரத்தில் ஓடியது. 'ஏண்டா, எலும்பு வாங்காது போகமாட்டியா நீ!' என்று செல்லமாக அதட்டிக்கொண்டே கருப்பையா இரண்டு எலும்புத் துண்டுகளை எடுத்து வீசினுன். வாலை ஆட்டிக்கொண்டே நன்றி கலந்த ஒரு பார்வையை அவனுக்குப் பரிசளித்துவிட்டு எலும்புத் துண்டுகளோடு போருக்கு நின்றது வல்லரக்கன்.

'மூர்த்தி சிறியதாயினும் கீர்த்தி பெரியது' என்பார்களே அதைப் போல காரைக்குடி புகைவண்டி நிலையம் சிறியது என்ருலும் அதற்கு மதிப்பும் புகழும் மிகுதி. அந்தப் புகை வண்டி நிலையத்தில் காலடி படாத இந்தியத் தலைவர்களே இல்லையென்று சொல்லலாம். இந்தியாவின் பல கோணங்களிலிருந்தும் மாணவர்கள் அங்கே படையெடுத்துக் கொண்டிருப்பார்கள். கள்ளிக் காடாகக் கிடந்த பாழ்நிலத்தை பண்படுத்தி கல்விக்கூடமாக்கி கலையரசிக்கு நிலையமைத்துக் கொடுத்த பெருமை, 'கர்ணனுக்குப் பின் கொடையில்லை' என்ற பழமொழியைப் பாழடித்து கடையேழு வள்ளல்களுக்குப்பின் எட்டாவது வள்ளலாகத் தன் பெயரைப் பொறித்துக்கொண்ட டாக்டர் அழகப்பாவிற்கே உரியது. விண்ணுேக்கி வளர்ந்து நிற்கும் அந்த கலைமாடங்களின் ஒவ்வொரு கல்லும் வள்ளலின் பெருமையை வாய்விட்டுக் கூறும். அங்கே பயிலும் மாணவர்களுக்கு பொழுதுபோக்குவதற்குரிய ஒரு இடம் அந்த புகைவண்டி நிலையம். எங்கேயோ, யார் யாருக்கோ, எப்பொழுதோ பிறந்து இப்பொழுது

> **இந்தச் சிறுகதையில், ரயில் நிலையத்தை உறைவிடமாகக் கொண்டு காலத்தைக் கழிக்கும் ஏழைகளை - பிச்சைக்காரர்களை கதாபாத்திரங்களாகப் படைத்திருக்கிருர் ஆசிரியர். சம்பவங்கள் இதயத்தைத் தடவுகின்றன. நொண்டி நாய் —அது மிக நல்ல நாய் — கதைக்கு அதுதான் உயிர் நாடி.** (ஆ-ர்.)

கருணை உள்ளம் கொண்டவர்களுக்கு 'ஐயோ பாவங்களாகவும்,' சீறும் குணம் கொண்டோர்க்கு 'சனியன்களாகவும், கல்லூரி மாணவ, மாணவியர்க்கு 'தம்பி தங்கைகளாகவும்', பொதுவாக உலகுக்கு அனுதையாகவும் காட்சியளிக்கின்ற சிவகாமிக்கும் வீரப்பனுக்கும் அந்த புகைவண்டி நிலையந்தான் நிரந்தர உறைவிடம். அந்தச் சின்னஞ் சிறிசுகளின் வாழ்க்கையோடு ஒட்டிக்கொண்ட நொண்டி நாய்தான் வல்லரக்கன். அந்த மூன்று உயிர்களின் வளர்ச்சியிலே தன்னை மறந்து மகிழ்ந்து களிப்பவர்தான் தண்ணீர் கொடுக்கும் தாத்தா. இப்படி உறவாலோ, இரத்தத் தொடர்பாலோ - அல்ல அன்பால், இதயத்தால் ஒன்றிய ஒரு குடும்பம் அங்கே ஆட்சி செய்தது. வீரப்பனும், சிவகாமியும் பச்சைக்கொடியும் சிவப்புக்கொடியும் போல. இந்த இருநிறக் கொடிகளின் அசைவிலேதான் வண்டி ஒழுங்காக ஓடுகிறது. அதுபோல், இந்த இரு உயிர்களின் இணைந்த அன்பில்தான் வல்லரக்கன் வகையாக வாழ்கிறது. இவர்களுக்கு, தண்ணீர் கொடுக்கும் தாத்தாதான் 'கார்டு.'

❋

இந்தக் குடும்பம் அமைந்த விதமே அலாதியானது. வெளுத்துப் போன தலைக்கு எண்ணெய் தேய்த்துக்கொண்டிருந்த தாத்தாவிடம் தாத்தா, தாத்தா...இரயில்வண்டியில் அடிபட்டுடுத்து தாத்தா...... காலிலே கட்டிக்க கொஞ்சம் எண்ணெய் தர்ரீங்களா தாத்தா.. பாவம் தாத்தா' என்று தன் மழலை மொழிகளை உதிர்த்தவாறு இரயிலடியில் பிச்சை எடுத்துக்கொண்டு திரியும் அந்தக் குட்டி - சிவகாமி ஒடிந்த காலிலிருந்து வடியும் இரத்தத்தோடு அடிபட்ட நாய்க்குட்டியை நெஞ்சில் அணைத்துக்கொண்டு நின்ருள். 'வா குட்டி, உட்காரு இந்தா, இப்படி கொடு நான் கட்டி விடுறேன்' என்று பரிவோடு பேசி நாய்க்குட்டியின் அடிபட்ட காலுக்கு ஒரு கட்டுப் போட்டார். அதற்குள் சிவகாமி பக்கத்துக் கடைக்குப் போய், கந்தல் பாவாடையில் எட்டு முடிச்சு போட்டு கட்டிவைத்திருந்த காலணுவுக்குக் கருப்புக்கட்டி துண்டு வாங்கிவந்து அந்த நாய்க்குக் கொடுத்தாள். அந்த மூன்று உயிர்களின் வாழ்விலும் இந்த நிகழ்ச்சி ஒரு முடிச்சைப் போட்டது. திடீரென்று ஒருநாள் இந்தோ சிலோன் துரித வண்டியில் வந்து இறங்கிய வீரப்பன் திரும்பிப் போகவேயில்லை. அதற்குமுன் வேறு ஏதோ ஒரு சிறிய புகைவண்டி நிலையத்தில் தொழில் புரிந்து கொண்டிருந்த அவனுக்கு கட்டிவராது போகவே தொழிலில் இலாபம் தேடி காரைக்குடி வந்து சேர்ந்தான். மக்களின் இரக்கத்தைப் பயன்படுத்தி தன் ஏழ்மையைத் துடைத்துக்கொள்ளும் பிச்சையெடுக்கும் தொழில்தான் அவன் செய்து வந்த வேலை. வாழ்க்கை வானில் கவலையற்றுப் பறந்து திரியும் வானம்பாடிகளான மாணவர்கள் காலையும் மாலையும் பவனிவரும் அந்த இடம் அவனுக்கு தங்கச் சுரங்கமாகவும், சொர்க்கலோகமாகவும் இல்லாவிட்டாலும் அவன் வயிற்றுக்குத் தடையில்லாமல் உணவளித்து வந்தது. அவன் சில நாட்கள் தனியே பிச்சையெடுத்து தன் வயிற்றைக் கழுவிக் கொண்டிருந்தான். ஒரு நாள் அவன் காய்ச்சலாகப் படுத்துவிடவே தாத்தாவின் சிகிச்சையும், சிவகாமியின் பரிவும் அவனுக்கு திரும்பவும் உடம்பில் வலிவையும், உள்ளத்தில் அதுவரை இல்லாத மகிழ்ச்சியையும் ஊட்டின. அதுவரை 'மூவராக' நின்ற அக்குடும்பம் 'நால்வரா'க உருமாறினர். சிவகாமியும் வீரப்பனும் உயிரால், உள்ளத்தால், உணர்வால் ஒன்றி உடலால் பிரிந்து நின்றனர்.

— 11-ம் பக்கம் —

“போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!”

எண்ணம்

கண்ணதாசன்

மலர் 4 || 14—9—57 || இதழ் 11

இலங்கைத் தமிழரும் நேருவும்

“ஈழத்துத் தமிழர்களைப் பற்றி என்றும்
இந்தியருக் கக்கரையே இல்லை! அன்னார்
ஈழத்துக் குடியினரே! எந்த நாளும்
இயற்கைவழிச் சிறுதொடர்பை முன்னி றுத்தி
ஈழத்தின் நாயகரைத் தட்டிக் கேட்க
இயலாது! முறையன்று! சட்டந் தீட்ட
ஈழத்தார்க் கதிகாரம் மெத்த உண்டாம்!”
என்றுரைத்தார் திருவாளர் ‘வெண்ணெய் வெட்டி’!

வெளிநாட்டுக் கொள்கையின்மீ துரைவ டித்த
வெண்ணெய் வெட்டிப் பண்டிதரின் வார்த்தைகேட்டு(க்)
களித்தார்கள் காங்கிரசார் தமிழ நாட்டின்
கண்போன்ற சோதரரை இலங்கைத் தீவில்
நெளித்தோடும் குருதியிலே மிதக்க விட்டு
நெளிகின்ற உறுப்பினரும் புன்ன கைத்தார்!
துளிர்க்காதா இலங்கையிலே தமிழர் வாழ்வு?
சுடுகாடு போகும்வரை தொல்லை தானா?

கொதிக்கின்ற நெஞ்சத்தைத் தேற்று வார்யார்?
குமுறிஎழும் கண்ணீரை நீக்கு வார்யார்?
வதைக்கின்ற முள்வேலி மாற்று வார்யார்?
வாடிவிழும் நிலைமாற்றி வழங்கு வார்யார்?
கதியின்றித் திகைக்கின்ற தாயும் சேயும்
கால்பார்த்து நடக்கின்ற மாத ராரும்
சதிக்கூட்ட மத்தியிலே புருக்கூட் டம்போல்
தடுமாறும் நிலைமாற்ற வல்லார் யார்?யார்?

நம்பியதோர் பண்டிதரும் காலை வாரி
நட்டாற்றில் விட்டாரே! தமிழா! உந்தன்
கும்பியிலே தீயள்ளிப் போட்டா ரேடா!
கும்பிடுநீ வடதிசையை நோக்கி நோக்கி!
தம்பிகளே! காங்கிரசுச் சாம்பி ராணித்
தமிழர்களே! மாடோட்டி வந்த தங்கக்
கம்பிகளே! புளியமரம் அருகில் உண்டா?
கயிறொன்று நான்தரவா? முடிவு கொள்வீர்!

“‘வடநாடா தென்னாடா? யாரு ரைத்தார்!
வாழ்கின்ற மாந்தரெலாம் ஓரி னத்தார்!
நடவாது! நடவாது! பிரிவி னைத்தீ
நம்நாட்டைப் பாழாக்கும் விடவே மாட்டோம்!”
படிதாண்டாப் பத்தினிகள் முழங்கி னார்கள்
பண்டிதரோ அவர்வாயைத் திறக்கக் கூறி
பிடிமண்ணைத் திணிக்கின்றார்! மெல்கின் றார்கள்!
பிறிதொன்றைப் போட்டாலும் விழுங்கு வார்கள்!

அருங்குலத்தீர்! நம்மவரை நாமே காப்போம்!
அவதியுறச் சேயீன்ற அன்னை யல்லால்
பெருமலடி அறிவாளோ பிள்ளைப் பாசம்!
பேடிகளை நம்புவதால் தேற்ற முண்டோ?
வருவதெலாம் நமக்கேதான்! மாற்றி வைக்க
வல்லவரும் நாமேதான்! வடக்கி ருந்து
வருவோரை உதைத்தோட்டி, இலங்கை விட்டு
வருவோரை அங்கங்கே வாழ வைப்போம்!

பாரதியின் வாழ்க்கையிலே...

பாரதியின் வாழ்க்கை, துன்பமும், துயரமும் நிறைந்ததுதான் என்றாலும், அந்த வாழ்க்கையில் எத்தனையோ சுவையான நிகழ்ச்சிகள் இருந்து வந்திருக்கின்றன. மனக்கவலையை மறந்து வாய்விட்டுச் சிரிக்கின்ற நிலையைக்கூடச் சில நிகழ்ச்சிகள் ஏற்படுத்தியுள்ளன. அவரது இளகிய உள்ளத்தையும் பல நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டியுள்ளன.

★ பாரதி, ஏழை எளியவரிடம் மிகவும் இரக்கம் காட்டுவார். புதுச்சேரியில் இருந்தபோது, அவர் வெளியே புறப்படுகிறார் என்றால், ‘புஷ்’ வண்டிக்காரர்கள் அவரை ஆவலுடன் எதிர்பார்ப்பார்கள். பாரதி ஏழையின் தொண்டனல்லவா? பாரதி தங்களுக்குப்பழைய ஆடைகளைத் தானம் செய்வார் என்று அந்த ‘புஷ்’ வண்டிக்காரர்களுக்குத் தெரியும். ‘துணி வேண்டும்’ என்று வண்டிக்காரர்கள் கேட்டால் போதும், தன் மேலிருக்கும் பட்டாடையானாலும் சரி, தன் சரிகைத் துண்டாக இருந்தாலும் சரி, தயங்காது தந்துவிட்டு தன் வழியைப் பார்த்துச்சென்று கொண்டிருப்பார் பாரதி!

★ கனகலிங்கம் என்ற ஆதித்திராவிடர் ஒருவர் பாரதிக்கு நண்பர். அவரை ‘பிராமணர்’ ஆக்கி வைத்தார் பாரதி. ஆம்! அவருக்கு ‘பூணூல்’ போட்டு, அதற்குரிய மந்திரமெல்லாம் பாரதியே சொல்லி அந்தப் ‘பெரும் விழாவை’ நடத்தி வைத்தார். மத சம்பிரதாயங்களை எவ்வளவு தூரம் கேலி செய்தார் பாரதி என்பதை இந்த நிகழ்ச்சி எடுத்துக்காட்டுகிறது.

★ ஒரு முறை, புதுச்சேரிச் சத்திரம் ஒன்றில் கதா காலட்சேபம் நடைபெற்றது. கதை செய்த பாகவதர், சாதாரணமானவர். அவ்வளவு திறமை அவருக்கு இல்லை. இதனால் கேட்க வந்தவர்கள் கதையை ரசிக்க வில்லை. ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். அந்தக் கூட்டத்தில் பாரதியும் அவரது நண்பர்களும் இருந்தார்கள்.

பாகவதர் அடிக்கடி ‘கோபிகா ஜீவனஸ்மரணே’ என்று சொல்வார்; அதைக் கேட்டதும் கூடியிருந்தவர்கள் ‘கோவிந்தா கோவிந்தா’ என்று சொல்வார்கள். இப்படியும் பலமுறை சொல்லியாகிவிட்டது. இதைக் கண்ட பாரதிக்கு மனதிலே ஏதோ தோன்றிவிட்டது. வெளியே வந்தார். அவருக்குத் தெரிந்த கோவிந்தன் என்னும் பெயருடைய ஒருவரைக்கூப்பிட்டார்; “கோவிந்தா! இன்னொரு முறை கூட்டத்தார் கோவிந்தா, கோவிந்தா என்று கூச்சல் போட்டு முடிந்ததும் நீ கூட்டத்துக்குள் சென்று ‘ஏன் எல்லாரும் சேர்ந்து என்னைக் கூப்பிடுகிறீர்கள்? என்று கேள்” என்று சொல்லி அனுப்பினார். அந்த நண்பரும் ஒப்புக் கொண்டார். மறுபடியும் பாகவதர், ‘கோபிகா...’ சொல்ல, ‘பக்த கோடிகள்’ ‘கோவிந்தா’ சொன்னார்கள். கோவிந்தன் பாரதி சொன்ன படியே செய்தான்! அவ்வளவுதான், பாகவதர் காலட்சேபத்தை விரைவில் முடித்துக்கொண்டு கிளம்பிவிட்டார்.

இது போன்ற பல நிகழ்ச்சிகள் பாரதியின் வாழ்க்கையிலே உண்டு. அவை, பெரும்பாலும் மூடப்பழக்கங்களையும், தவறான போக்குகளையும் கண்டிக்கும் விதத்திலேயே அமைந்திருந்தன.

★

ஆசிரியத் தோழருக்கு

டில்லி முடங்கல் கூறும் உண்மைகள்

பண்டிதர்-பந்த் தகராறு அம்பலமாகிறது!

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம். நான் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவன். பத்தாண்டுகளுக்கு முன்பே டில்லிக்கு வந்துவிட்டேன். இப்போது வடநாட்டைப் பற்றி ஓரளவு புரிந்துகொண்டிருக்கிறேன். வடவர்களுக்கும் நமக்குமுள்ளவேற்றுமைஎனக்குநன்றாக விளங்குகிறது. என்றென்றைக்கும் சாகாத புகழைச் சம்பாதித்திருக்கும் எந்தத் தலைவனது சொல்லுக்கும் இனிமேற்கொண்டு இந்தியா கட்டுப்படப் போவதில்லை. அந்த அளவுக்கு பிளவு-வடநாட்டில்கூட பிளவு ஏற்பட்டிருக்கிறது!

தோழர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் டில்லி பாராளுமன்றத்தில் பேசிய பிறகு, பாராளுமன்றத்தின் தோற்றமே இப்போது மாறித்தானிருக்கிறது. எதிர்காலத்தில் இந்தியாவில் பல தனியரசுகள் ஏற்படுமோ என்று எண்ணவேண்டியிருக்கிறது. குஜராத்திகளும், மராட்டியர்களும், வங்கத்தைச் சேர்ந்தவர்களும் அதற்கான முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. அவர்களின் முயற்சி வெற்றி பெற்றாலும்கூட ஆச்சரியப்படுவதற்கில்லைதான்!

இந்தியத் துணைக்கண்டத்தின் தென்பகுதியில் வாழுகிறவர்கள் - அதாவது நமது தமிழர்கள் நேருவைப் பற்றியே எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். எனக்கு வருத்தமாகத்தானிருக்கிறது. அவர்கள் நினைக்கிற நேரு டில்லியில் இல்லை! நேரு இங்கே சாதாரணமானவர்-பிரதமர்தான் - ஆனால் அதற்கான 'ஜபர்தஸ்து' இல்லை! ஏன் இல்லை? அதுதான் பெரும் புதிராக இருக்கிறது. தமிழ்நாட்டிலே மட்டும், ஆகாயத்திலே இருந்து குதித்தவரைப் போலவும், ஆண்டவனுடைய தோள்பட்டைக் கிளியாக இருந்தவரைப்போலவும் நடந்துகொள்கிற நேரு, ஏன் வடஇந்தியாவில் ஒரு சாதாரணப் பிரஜையைப் போல் நடந்துகொள்கிறார் என்று புரியவில்லை. எத்தனையோ முறை, அவரை நான் பூங்காவில் தனிமையில் பார்த்திருக்கிறேன். பொது மக்களுக்கு அவரை நேரு என்று தெரியும்; ஆனாலும் அவர்கள் அவரைப் பொருட்படுத்தி நான் பார்த்ததில்லை. அதே நேரத்தில், உள்நாட்டிலாகாப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் வல்லபந்த், டில்லி பாராளுமன்றத்தில் கதாநாயகனாக இருக்கின்றார். டில்லிப் பாராளுமன்றக் கட்டடத்திற்குள் நேரு நுழையும்போது இல்லாத பரபரப்பு பந்த் நுழையும்போதுதான் இருக்கிறது. இதைப் பற்றி நான் பலரிடம் கேட்டபோது, நேருவுக்கும் பந்த்துக்கும் கருத்து வேறுபாடு என்கிறார்கள். இருக்கலாம். இரண்டு மாதங்களாக நான் உளவறிந்து பார்த்ததில், அபுல் கலாம் ஆசாத் பற்றிய ஒரு பிரச்சினையில் இருவருக்கும் கருத்து மாறுபாடு என்று பேசிக்கொள்ளப்படுகிறது. என்னைப் பொறுத்த வரையில், இது உண்மையாக இருக்குமென நம்புகிறேன்.

இப்போதிருக்கிற டில்லி மந்திரிகளில் நேருவுக்கு அடுத்தபடியாக இருக்கவேண்டியவர் ஆசாத் தான். ஆனால் இன்றைய நிலை அப்படி இல்லை. எல்லாம் பந்த், கையில்! ஆசாத் ஒரு மந்திரியாக மதிக்கப்படுகிறாரே தவிர, வேறு ஒன்றும் அவருக்கு இல்லை. இது நேருவுக்குப் பிடிக்கவில்லையாம்! ஆசாத்திற்கு முக்கியத்துவம் வேண்டுமென்கிறார் நேரு. அதை மறைமுகமாக எதிர்க்கிறார் பந்த். இதுதான் தகராறுக்குக் காரணம். அண்மையில் விலகிப்போன நிதியமைச்சர் சிந்தாமணி தேஷ்முக்கூட இந்தச் சிக்கலில் தலையிட்டதாகப் பேசிக்கொள்கிறார்கள். அவரது மனத்தாங்கலுக்கு இதுவும் ஒரு காரணம் போலும்!

இது பழைய கதையானாலும், அவர்கள் இருவரின் மன வெறுப்பை வளர்த்து விடுவதற்கான புதுப் பிரச்சினைகள் இப்போது டில்லியில் முளைத்திருக்கின்றன. அவைகளில் முதலானதும், முக்கியமானதும் **சோஷலிஸ்டுகளின் ஐக்கியம்!**

பண்டிதநேரு எப்போதுமே சோஷலிசத்தை விரும்புபவர். அந்தக்கொள்கைகளில் அதிகமான பற்றுக்கொண்டவர். இது நாடறிந்த உண்மை. ஆனால் பந்த் அப்படிப் பட்டவரல்ல. அவர் கடைந்தெடுத்த முதலாளித்துவப்பித்தர்.

பண்டித நேரு, இனிமேற்கொண்டு காங்கிரசைத் திருத்த முடியாது, கொள்கைகளை மாற்றி, ஆட்களை விலக்கிப் பயனில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டவர். அதற்காக, அவருக்கு விருப்பமான ஆரம்பகாலக் கொள்கைகளை - சோஷலிசக் கொள்கைகளை -- காங்கிரசில் புகுத்தாமல், அந்தக் கொள்கைகளையே நடைமுறைத் திட்டமாக்க இத்தனை காலமும் இயங்கி வந்தவர்களின் கையிலேயே-அதாவது சோஷலிஸ்டுகளின் கையிலேயே ஆட்சியைப் படிப்படியாக ஒப்படைக்க விரும்புகிறவர். காங்கிரசினால் சோஷலிசக் கொள்கைகளை அமல் நடத்தமுடியாது என்று நன்குணர்ந்த நேரு தனது காலத்திற்குள் இப்படி ஒரு மாற்றத்தை விரும்புகிறார். ஆனால் இந்தக் கருத்தை அடியோடு வெறுக்கிறவர் பந்த். காங்கிரஸ்தான் நாட்டை என்றென்றைக்கும் ஆண்டு கொண்டிருக்க வேண்டுமென்கிறவர் அவர். பந்த். காங்கிரசைச் சீர்திருத்திவிட முடியுமென்கிறார். இதே நேரத்தில் நேருவின் கருத்தை மனதிற்கொண்டு ஜெயப்பிரகாஷ் நாடெங்கும் பேசிக்கொண்டு வருகிறார். என்ன பேசுகிறார்? இன்னும் மூன்றாண்டுகளில் காங்கிரஸ் உடைந்துவிடும் என்கிறார். டில்லி வட்டாரத்தில் இது பற்றி வேறு விதமாகப் பேசிக்கொள்ளப்படுகிறது. நேருவின் பின்னணியில் தான் ஜெயப்பிரகாஷ், லோகியா சந்திப்பு நடைபெறுகிறதோ என்று சிலர் ஐயுறுகிறார்கள். காங்கிரசோ அழியும் நிலையில் இருக்கிறது. காங்கிரசுக்குப் பிறகு ஒரு பெரிய கட்சி, அகில இந்தியக் கட்சி-வேறு இல்லை. கம்யூனிஸ்டுகள் நம்பிக்கையை இழந்தவர்கள், ஆகவே சோஷலிஸ்ட் கட்சியைப் பலப்படுத்தினால்தான் இந்தியா, இந்தியாவாக இருக்கும், நிரந்தரமாக டில்லியே தலைநகராக முடியும் - என்று நேரு நினைக்கிறார். இதையேதான் பந்த்தும் நினைக்கிறார், அவர் காங்கிரசேதான் இருக்கவேண்டும் என்கிறார். இவர்கள் இருவரில், யார் என்ன நினைத்தாலும், இந்த பலவீனத்தை சோஷலிஸ்ட்-பி. சோஷலிஸ்ட் தலைவர்கள் புரிந்துகொண்டார்கள். எனவே ஒன்றுகூடப் போவதில் சந்தேகமில்லை. இப்படியும் அப்படியுமாகக் கொஞ்ச நாளைக்கு 'முட்டை முந்தியா கோழி முந்தியா' என்பார்கள்.

இந்தியாவை அடுத்து ஆள நினைப்பது காங்கிரஸ் ஆனாலும், சோஷலிஸ்ட் ஆனாலும், அந்த மாற்றம் தமிழ்நாட்டுக்கு ஒன்றும் சாதகமாகிவிடாது. சோஷலிஸ்ட்களிலும் தலைவர்கள் வடஇந்தியாக்காரர்கள்தான். காங்கிரசில் சத்தியமூர்த்தி, ராஜாஜி, போன்றவர்கள் இருந்துமே தமிழ்நாட்டுக்கு எதுவும் நடக்கவில்லை என்கிறபோது, வேறு யார் சோஷலிஸ்ட் கட்சியில் இருந்தாலென்ன!

நீங்கன் என்ன நினைத்தாலும் சரி, நான் அரசாங்க உத்தியோகஸ்தனானாலும், நீங்கள் வெறுக்கின்ற பார்ப்பனனானாலும் தென்னாடு பிரிவதை நான் மனதார வரவேற்கிறேன். அதுவரை தமிழ்நாடு ஒருபோதும் உருப்படப்போவதில்லை.

இப்படிக்கு,
"வைகைக் கரையோன்"

புதுடில்லி.
9—9—57.

திறந்த பெட்டி!



சதிலீலாவதி படப் பிடிப்புக்காக, கலைவாணரும், மற்றும் பல நடிகர்களும் கல்கத்தா சென்றிருந்தார்கள். உடன் நடித்த ஒரு பிரபல நடிகர் தன் சம்பந்தப்பட்ட படப்பிடிப்பு முடிந்ததும் சொந்த ஊருக்குப் புறப்படத் தயாரானார். கலைவாணரிடம் தனது பயணத்தைத் தெரிவித்தார். அதைக் கேட்ட அவர் ஒரு கணம் அதிசயப்பட்டார். அடுத்த நிமிடமே, "வேண்டாம் ஐயா! இப்போ என்ன அவசரம்?" என்று அவரைக் கேட்டார். அவர் என்ன சொல்வது என்று தெரியாமல் விழித்தார். அடுத்த கணம் அவரது நிலைமையைப் புரிந்துகொண்டார். "ஊருக்குப் பணம் வேண்டுமென்றால் அனுப்பிவிடு! மெதுவாகப் போய்க் கொள்ளலாம்" என்றார். அதற்கும் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தவித்தார் நண்பர். தலையை இலேசாகச் சொரிய ஆரம்பித்தார். தொண்டையைக் கனைத்துக்கொண்டார். "அனுப்பலாம்! ஆனால்..." என்று சொல்லி, வார்த்தைகளை விழுங்கினார். அவ்வளவுதான். கலைவாணர் புரிந்துகொண்டார். அவருக்குக் கோபம் வந்துவிட்டது. உடனே, "அட பைத்தியக்காரா? இதை அப்போதே சொல்வதற்கென்ன? போ! போ! என் பெட்டியில் ரூபாய் இருக்கிறது. எடுத்து எவ்வளவு அனுப்ப விரும்புகிறாயோ, அவ்வளவு அனுப்பு" என்று சொன்னார். உடனே நண்பர், "ஆமா! பெட்டிச் சாவியைத் தரவில்லையே!" என்றார். கலைவாணர் மெதுவாக, "அட பைத்தியக்காரா! என் பெட்டிக்குப் பூட்டு ஏது? அது எப்போதும் திறந்த பெட்டி! போ! சீக்கிரம பணத்தை எடுத்து ஊருக்கு அனுப்பு" என்று சொன்னார். அதைக் கேட்ட அந்த நண்பருக்கு ஏற்பட்ட ஆச்சரியத்துக்கு அளவே இல்லை.

ஐயனுக்கு எழுந்த ஐயம்!

மூலம் :
வால்மீகி இராமாயணம்

தமிழில் :
ந. அலி

இராமாயணப் பெரும் போருக்குப் பிறகு இராமனும் சீதையும் சந்திக்கின்றனர். இராமன் சீதையின் கற்பைச் சந்தேகிக்கின்றான். அப்போது சீதையைப் பார்த்து அவன் உரைக்கும் பாக்களே இக்கவிதை வடிவம். ஆதாரம் வால்மீகி இராமாயணம். இது இலங்கைக்காண்டம் 104லிருந்து 128 முடிய சுலோகங்களின் மொழிபெயர்ப்பு; தழுவல்கூட அல்ல.

செங்கரும்பே! கனிச்சாறே! அன்றொருநாள் காட்டில்
தனித்திருந்த வேளையிலே இலங்கைநகர் வேந்தன்
பங்கயத்தைப் பறிப்பதுபோல் உனைக்கொண்டே சென்றான்
பழிமட்டும் என்மீது விழுந்துவிட்ட தையோ!
கொங்கலரு நறுமலரே! இராவணனை வென்று
குலப்பெருமைக் கேற்பட்ட களங்கமதைப் போக்கி
மங்கையுனை விடுவித்தேன்; மண்ணுலகில் எந்தன்
மங்காத பெரும்புகழை நிலைநாட்டி விட்டேன்.

அலைமோதும் கடல்தாண்டி அருஞ்செயல்கள் செய்தே
அழகுநகர் இலங்கைக்கே அனலிட்ட அனுமன்
சிலைதாங்கும் என்தோளுக் கிணையான வீரன்
சிறுபோதும் எனைப்பிரியா உயிர்த்தோழன்; போரில்
புலியாகப் பாய்ந்தோடும் சுக்ரீவன் எந்தன்
புகழுக்குப் பேருதவி புரிந்திட்ட நல்லோன்
வலிவேந்தன் திருத்தம்பி வீடணனும் நன்கு
வெஞ்சமரில் துணைநின்றான்; அதனால்தான் வென்றேன்.

பன்னாட்கள் தன்கணவன் திருமுகத்தைக் காணா
பளிங்குநிகர் மேனியளாம் எழிலரசி சீதை
தன்னுளத்தில் மகிழ்வெய்தித் தடங்கண்கள் கொண்டு
தாவுகின்ற மானைப்போல் தனைமறந்தாள்; இராமன்
பின்னிவிட்ட மொழிகேட்டுப் பூவிழியில் கண்ணீர்
பொலபொலவென் றுதிர்த்திட்டாள்; நிலம்நோக்கி நின்றாள்;
என்னென்ன நினைத்தாளோ உள்ளத்தில்! ஆனால்
ஏதொன்றும் சொல்லாமல் கடுங்கோபம் கொண்டாள்.

எரிகின்ற பெருந்தீயில் நெய்விட்ட தேபோல்
எல்லையிலாச் சினம்கொண்டான் பெருவேந்தன் இராமன்
எரிபோல விழிமாறிப் புருவங்கள் ஏற
இரைதேடி வெளிச்சென்ற வேங்கைபோல் அன்னோன்
கருவண்டு விழியாளைக் கோபத்தால் கண்டு
களம்வென்ற பெருஞ்சேனை இருந்ததைமறந்து
கருநாக நஞ்சுநிகர் கடுஞ்சொற்கள் சொன்னான்;
கார்குழலாள் குனிந்தபடி சிலையாகி நின்றாள்.

தமிழ்முனிவர் அகத்தியனார் தென்திசையில் போந்து
தடைசெய்த அரக்கர்தமை வென்றதைப்போல் நானும்
இமிழ்திரைகள் எழுந்துலவும் கடல்தாண்டிச் சென்று
இராவணனைப் பழிவாங்கி, அவமானந் தன்னை
உமிபோல ஊதிட்டேன்; என்றாலும் இந்த
ஒப்பில்லாப் பெரும்போரில் உதவியவர் கண்ணின்
இமைபோலும் நட்பாளர்; உண்மையிலே நாங்கள்
எழிலணங்கே உனக்காகப் போரிடவே இல்லை.

கண்வலியால் வருந்துபவன் விளக்கொளியைக் காணக்
கடுகளவும் மனம்ஒப்பான்; அதைப்போலே இந்த
மண்ணாளும் முடிவேந்தன் என்முகத்தைக் காண
மனங்கூசு கின்றாய்நீ; மதிமயங்கு கின்றாய்
பெண்ணணங்கே உன்கற்பில் இன்றெனக்கே ஐயம்
பிறந்துவிட்ட தென்சொல்வேன்; உன்னழகைக் காணும்
எண்ணமில்லை; உன்னுடைய மனப்போக்கின் தன்மை
எள்ளளவும் பிடிக்கவில்லை; புரியவில்லை ஒன்றும்!

மொய்வண்டு பண்பாடும் மிதிலைநகர் வேந்தின்
மகளரசி! விருப்பம்போல் எங்கேனும் செல்வாய்
ஐயிரண்டு திசைகளுமே திறந்துளன இன்று;
ஆதலினால் எதையேனும் ஏற்றுக்கொள் நன்கு
பொய்யல்ல, மெய்யாக உரைக்கின்றேன் பெண்ணே
பலனில்லை அணுவளவும் உன்னாலே வாழ்வில்!
செய்யாத குற்றத்தைச் சொல்லவில்லை நானும்
சேயிழையே! ஏதேனும் சிந்தித்தே செய்வாய்!

மாற்றானின் பெருமனையில் பலநாட்கள் வாழ்ந்தாய்
மாசற்றாள் எனயிங்கே யாருரைப்பார் உன்னை!
காற்றினிலே பறந்தவனின் மடிமீதில் அமர்ந்தாய்;
கண்ணுக்கே விருந்தானாய்; களங்கமதைப் பெற்றாய்.
ஏற்றமிகு நற்குலத்தில் பிறந்தவன்எவ் வாறு
இளங்கொடியே உனைஏற்பான்? ஆகையினால் நானும்
சாற்றுகிறேன் இன்றுமுதல் உன்னிடத்தில் எனக்குச்
சற்றேனும் தொடர்பில்லை; எங்கேனும் செல்வாய்!

நன்றாகச் சிந்தித்த பின்னேதான் சொன்னேன்
நல்லவளே உன்விருப்பம்; ஏதேனும் செய்வாய்!
என்தம்பி இலக்குமணன், சுக்ரீவன், பரதன்
இராவணனின் திருத்தம்பி வீடணன்போன் றோரில்
உன்மனதிற் கேற்றவரின் இல்லத்தில் இருப்பாய்
உன்சுகத்தை நன்முறையில் காத்திடுவாய் பெண்ணே!
உன்னாலே என்வாழ்வில் பயனேதும் இல்லை
உறுதியுடன் உரைக்கின்றேன், நம்பிக்கை கொள்வாய்.

மதிபோலும் அழகான உன்முகத்தைக் கண்டே
மறவேந்தன் விரும்பியதைச் செய்திருப்பான்; நீயும்
புதியவளாய் அவ்விடத்தில் பலநாட்கள் வாழ்ந்தாய்!
பொன்னுடலின் எழில்கண்டு மயங்காதார் யாரே?
இதுபோலப் பெருமன்னன் திருக்குமரன் சொன்னான்;
ஏந்திழையாள் மதயானை அசைக்கின்ற கொடிபோல்
கதிகலங்கி நின்றிருந்தாள்; கண்களிலே கண்ணீர்
கரையில்லா ஆறாகப் பெருகியதே அம்மா!

வெண்பாப் போட்டி-4.

ஈற்றடி :

கலைவாணர் இல்லாக் கலை.

முடிவு தேதி 21-9-57.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

சிறந்தது என்று தேர்ந்தெடுக்கப்படும் வெண்பாவுக்கு ரூ. 10 பரிசளிக்கப்படும்.

எப்பக்கம் வந்து புகுந்துவிடும்? - இந்தி

எத்தனை பட்டாளம் கூட்டிவரும்?

1938லே கண்டிராத எழுச்சி, 1952லே ஏற்பட்டிராத மொழி ஆர்வம் இன்றைக்குத் தமிழகத்தில் வளர்ந்திருப்பது பெருமைப் படக்கூடியதாகும். எப்படி வளர்ந்தது இந்த எழுச்சி? யாரால் ஏற்பட்டது இந்த மொழிப்பற்று?-என்பது, தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஆராய்ச்சிக்குரியதல்ல. பகைவர்களைக் கேட்டால்கூட உண்மையைச் சொல்லி விடுவார்கள். அந்தப் பெருமையை திராவிட முன்னேற்றக் கழகத்திடமிருந்து அடித்துப் பறித்துக் கொள்ள எவருக்கும் துணிவிருக்காது.

தென்னாடு - தமிழகம் - என்றாலே அதற்குள்ளே அடங்கியிருக்கிற மொழி, கலை, நாகரிகம், பண்பாடு - இவை அனைத்தையும் பாதுகாக்க துவக்கப்பட்டிருக்கும் கட்சி தி. மு. கழகம் தான் என்பதை நல்லோரும் ஒப்புக்கொண்டாகிவிட்டது; மற்றோரும் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் அது பொது மக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளாக இருந்தால் தி. மு. க. சம்பந்தப்படாமல் இருப்பதில்லை - சம்பந்தப்பட்டால்தான் விழா இனிது நிறைவேறுகிறது என்கிற நிலைக்கு நாடு வந்துவிட்டது.

இந்தச் சிறப்பு, கட்சிக்காக ஏற்பட்ட சிறப்பல்ல; மக்களை உணர்ந்த கட்சிக்கு மக்கள் காட்டும் அன்பு. கடமை உணர்ச்சி! வேறு எந்தக் கட்சிக்காரர்களும் இதைத் தட்டிப் பேசியதில்லை. ஏன்?

தமிழ்க்கழகமா? — அண்ணாதுரையைக் கூப்பிடு!

கலைமன்றமா? — அண்ணாதுரையைக் கூப்பிடு! மொழி வளர்ச்சிக் கழகமா? — நெடுஞ்செழியன் எங்கே? இலக்கியப் பேரவையா? தி. மு. க. தலைவர்களை அழையுங்கள்!

—என்று நாடு கேட்பதை எல்லா எதிர்க்கட்சிக்காரர்களும் நன்குணர்ந்திருக்கும்போது, தமிழ்நாட்டில் தமிழார்வத்தை ஊட்டியது யார் என்று அவர்கள் உணராமல் இருக்கிறார்கள்? உணர்கிறார்கள். ஒருசிலர் வேண்டுமானால் வெற்றி முத்திரை தங்களுக்குக் கிடைக்காது போய்விடுமே என்பதற்காக வெறும் வாய்நீரை வடித்துக் கொண்டிருக்கலாம். நாம் மொழி வளர்ச்சியை விரும்புகிறோம்; பொதுநலத்தை நாடுகிறோம். பொறாமைக்காரர்களைப் பற்றி நமக்குக் கவலையில்லை. மொத்தத்தில் தமிழகத்தில், கட்சி கடந்த, இனம் கடந்த, மதம் கடந்த மொழியார்வம் வளர்ந்துவிட்டது. இது மகிழ்ச்சிக்குரியது. எதிர்காலத் தமிழகத்தின் புது வாழ்வுக்கான அறிகுறி என்றே கருதலாம்.

ஆனால் அரசியலார், தமிழகத்தில் ஏற்பட்டிருக்கும் மொழியார்வத்தை எந்தக் கண்ணோட்டத்தில் பார்த்திருக்கிறார்கள் என்பதே இங்கே பிரச்சினைக்குரியதாகும். ஏனென்றால் அரசியல் முன்னோடிகளின் தொனியிலே இப்போது கனிவும் குழைவும் தென்படுகிறது. அந்தக் கனிவுக்கும், குழைவுக்கும் என்ன பொருள் என்று அறிய தமிழர்கள் விரும்புகிறார்கள். தமிழைப் பற்றியே புகழ்கிறார்கள் அமைச்சர்கள். ஏன் இந்தப் புதுப் புகழ்ச்சி என்றுதான் தமிழகம் சந்தேகிக்கிறது. இந்தி மொழி-வருகிறேன், வருகிறேன் என்று முப்பதாண்டுகளாகத் தான் சொல்லிக்கொண்டிருக்கிறது! கடந்த முப்பதாண்டுகளாக இல்லாத புகழ்ச்சி தமிழுக்கு இப்போது மட்டும் சூட்டப்பெறவானேன்!

ஆறுயிரம் மைல்களுக்கப்பால் உள்ள ஆங்கிலேயர்கள் குறளைக் கற்றுப்போனார்கள்! அவர்களின் தாய் மொழியில் குறளைப்பெயர்த்து எழுதிக் கொண்டார்கள். யாரும்சொல்லி —சிபாரிசு செய்து வெள்ளையர்கள் தமிழைக்கற்கவில்லை. இத்தனைக்கும் வெள்ளையன் இந்தியாவை ஆண்டுகொண்டிருந்தான். ஆளும் வர்க்கத்தினர் அடிமைப்பட்டுக்கிடக்கும் ஒரு சமுதாயத்தின் மொழியைக்கற்றுக்கொண்டு போனார்கள் என்றால், தமிழை உணர்ந்தார்கள்; எனவே கற்றார்கள். ஆனால் இன்றைக்குள்ளவர்கள் திடீரென்று தமிழைப்புகழ்கிறார்கள். மகள் தாயைப்புகழலாம்; தாய் மகளைப்போற்றலாம்; இத்தனை காலமும் தாயை மறந்த மகளும், மகளை இகழ்ந்த தாயும் ஏன் திடீரென்று புகழ வேண்டும்? பூவின் மறைவிலேயே பூநாகமா? புன்னகையின் இடுக்கிலே கடுவிஷமா? புகழ்ச்சியின் திரைக்குப்பின்னே புதியசதியா? ஒன்றும் புரியவில்லை! ஆனால் தமிழர்கள் எதற்கும் தயார் என்ற நிலைக்கு வந்துவிட்டார்கள். எப்படி இந்தத்துணிவைத் தமிழர்கள் பெற்றார்கள்? அதற்குக் காரணமில்லாமலில்லை! உண்டு.

இந்தியை அரசாங்க மொழியாகக்கொண்டு வர அரசாங்கம் நினைத்தபோது, டில்லி அரசியலாரும் சரி, தமிழ் நாட்டு அரசியலாரும் சரி, அவர்கள் எதை மனதிலே கொண்டிருந்தார்களோ அதையேதான் திரும்பத் திரும்ப வலியுறுத்தினார்கள். அப்போதெல்லாம் இந்தியை கட்சி சார்பற்றவர்கள் எதிர்க்கவில்லை. தமிழ்ப் பெரும்புலவர்கள் எதிர்க்கவில்லை. காரணம் தமிழுக்கு ஆதரவாக இந்தியை எதிர்ப்பதே ஒரு கட்சியின்— அரசியல் கட்சியின் பணியாகக் கருதப்பட்டது. அந்த எதிர்ப்பை ஒடுக்குவதற்கு சர்க்கார் பலமான எதிர் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டார்கள். பலரைத் தாக்கினார்கள்; சிலரைக் கொன்றார்கள். அந்த முயற்சிலே பலத்த தோல்விகண்ட இந்தியப் பேரரசு வேறொரு புதிய முறையைக் கையாண்டது. 'வடவர்களும் தமிழைக்கற்றுக் கொள்வார்கள்; எனவே தமிழர்களே இந்தியை ஏற்றுக்கொள்ளுங்கள்' — என்று பேசத்தலைப்பட்டு அறிக்கைகளையும் பறக்க விட்டார்கள்.

இவ்வாறு சொல்லி பல ஆண்டுகள் கடந்து விட்டன. எத்தனை குஜராத்திகள், எத்தனை மராட்டியர்கள் தமிழைக் கற்றுக்கொண்டு போனார்கள்? அரசியலாருக்குத் தெரியுமா? அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டார்களா? இல்லை! எந்தெந்த வழிகள் மூலமாக இந்தியைப் புகுத்த நினைத்தார்களோ அதற்கெல்லாம் அவர்கள் உழைத்தார்கள்; அவ்வளவு தான். அந்த நேரத்திலே கூட தி. மு. க. அதனுடைய திட்டவட்டமான கருத்தைத் தெரிவித்திருந்தது, தமிழகம் இந்தியை ஒருபோதும் ஏற்காது! ஏற்காது! என்று.

இதையும் இந்திய அரசியலார் பொருட்படுத்தவில்லை. தென்னாட்டில் இந்தியைப் புகுத்த என்னென்ன வழிகள் இருக்கின்றனவோ அந்த வழிகளைக் கண்டு பிடிக்க முனைந்திருக்கிறார்கள். தினசரி முயற்சியும் செய்து கொண்டு வருகிறார்கள்.

அலறும் குழந்தைக்கு கிலுகிலுப்பையைக் காட்டலாம்; புட்டிப்பால் கொடுக்கலாம். அழுகுரல் ஓயக்கூடும். ஆனால் தமிழர்கள் குழந்தைகள் அல்லவே! தீர்மானமாக ஒரு முடிவுக்கு வந்த பிறகுதான் இந்தியை எதிர்க்கிறார்கள். இந்தியின் மீது தமிழருக்குத் தனிப்பட்ட குரோதமல்ல; பெரும்பாலான தமிழ்ப் புலவர்கள் இந்தி படித்திருக்கிறார்கள்; விசாரதியாகக்கூட இருக்கிறார்கள். ஆனால் இந்தி அரசியல் வர்ணம் பூசிக்கொண்டு வருவதைத் தமிழர்கள் ஒருபோதும் பார்த்துக்கொண்டிருக்கமாட்டார்கள். நிதியமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிடுவதைப் போல் இந்தி நுழைந்தால் தமிழ் அழிந்துவிடும் என்று கருதித்தமிழர்கள் இந்தியை எதிர்க்கவில்லை. இன்றையதினம் தமிழை மதிக்கும் அரசியல் தலைவர்களும், பெரும் புலவர்களும் நிதியமைச்சரைக் காட்டிலும் தமிழைப்பற்றியும் அதன் வளத்தைப் பற்றியும் அதிகம் அறிவார்கள். டச்சுக்காரர்கள் வந்தபோது அழியாத தமிழ், போர்ச்சுக்கீசியர்கள் வந்தபோது அழியாத தமிழ், டியூப்ளே நுழைந்தபோது அழியாத தமிழ், கிளைவும், ஹேஸ்டிங்சும் ஆண்டபோது சிதைவுறாத தமிழ், நேருவால் அழிந்துவிடும் என்று யாரும் கருதவில்லை, பயப்படவில்லை. ஆனால் தமிழகத்தில் ஆட்சி மொழியாக வருவதை, அரசியல் முக்கியத்வம் பெறுவதை இந்தி கற்றால்தான் அரசாங்கத்தில் உத்தியோகம் என்ற அதிகாரத்தோடு வருவதை தமிழர்கள் சகிக்கமாட்டார்கள்.

இப்போது அரும்புவிட்டிருக்கும் மொழிப் போராட்டத்தில் குறிப்பிட்ட ஒரு சாரார் மட்டுமல்லாமல், குறிப்பிட்ட ஒரு கட்சிக்காரர்கள் மட்டுமல்லாமல், தமிழர்கள் ஒருமனதோடு இணைந்து போராடத் தயாராகி விட்டார்கள். மாணவர்கள் அவர்களாகவே அவர்களது கடுமையான எதிர்ப்பைத் தமிழகமெங்கணும் தெரிவித்துவருகிறார்கள். இத்தனை காலமும் ஒதுங்கி நின்ற தமிழ்ப் பெரும் புலவர்கள் நமக்குத் தைரியமூட்டும் வகையில் பேசத் தலைப்பட்டுவிட்டார்கள். தமிழ்ப் பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள்கூட இந்தி மொழி ஆதிக்கத்தை பலமாகக்கண்டித்திருக்கிறார்கள். தமிழர்களின் ஒற்றுமைக்கு வேறு சான்று வேண்டுமா? சிதறுண்டு கிடந்த செந்தமிழ்க் காவலர்கள் ஒன்று சேருகிறார்கள். அண்ணா இருக்கிறார் வழிகாட்ட! ஆற்றல் மிகு தமிழர் படை இருக்கிறது, அந்த வழி நடக்க! வந்துவிடுமா இந்தி! வென்றுவிடுமா நம்மை! எப்பக்கம் வந்து புகுந்துவிடும்? எத்தனை பட்டாளம் கூட்டி வரும்?

—தென்னரசு

ஓர் முக்கிய அறிவிப்பு

'தென்றல்' சம்பந்தமான கடிதப் போக்குவரத்து, மணியார்டர், செக், டிராப்ட், போஸ்டல் ஆர்டர் முதலியவைகளை நிர்வாகி, 'தென்றல்' என்ற முகவரிக்கே அனுப்பவேண்டும். 'தென்றல்' சம்பந்தப்பட்டவைகளை 'முல்லை'யுடன் சம்பந்தப்படுத்தி எழுதவோ அனுப்பவோ கூடாது. அப்படி அனுப்பப்படுபவைகள் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

நிர்வாகி : 'தென்றல்'.

நான் எழுத்தாளன் ஆனேன்

கண்ணதாசன்

- 4 -

அவனும் அவளைப் பார்த்தான்.

அவன் அவளிடம் கேட்க வேண்டியது எதுவும் இல்லை. ஆனால், அவனிடம் ஏதோ கேட்க விரும்பியவள்போல அவள் காணப்பட்டாள். அவளது பார்வையில் அந்தப் பொருள் தெரிந்தது. ஏதோ பேசப் போகிறாள் என்று எதிர்பார்த்து அவன் பார்வையை வேறு புறம் திருப்பிக் கொண்டிருந்தான். அவன் எதிர்பார்த்தது நடந்தது. அவள் கேட்டாள்:

"உங்களுக்கு எந்த ஊர்?" அவன் சொன்னான்:

"இராமனாதபுர மாவட்டத்தில் ஒரு கிராமம்."

"உங்கள் பெயர்?"

அவன் தன் பெயரைச் சொன்னான்.

"இங்கே எங்கே இருக்கிறீர்கள்?"

அவன் தான் இருக்குமிடத்தைச் சொன்னான்.

புதிய அறிமுகம். இதற்கு மேல் அவள் கேட்கவேண்டியது என்ன இருக்கிறது? ஆனாலும் அவள் மேலும் பேச விழைந்தாள். அதை அவன் துவக்கி வைத்தான். அவளது பெயர் எமிலி என்பதையும், ராணி மேரி கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறாள் என்பதையும், சொந்த ஊர் காரைக்கால் என்பதையும் பேச்சுக்கொடுத்துத் தெரிந்துகொண்டான்.

இந்த நிலையில், ராணிமேரி கல்லூரியின் விடுதியினருகில் நான்கு பாதை சந்திப்பில், டிராம் வண்டி நின்றது. தான் இறங்க வேண்டிய இடம் வந்துவிட்டது என்பதைக் கூறியபடி, "நீங்களும் வாருங்களேன்"-என்பது போல அவள் அவனைப் பார்த்தாள். இந்த அழைப்புத் தோற்றம் அவனுக்குப் புதுமையாக இருந்தது.

அவனும் இறங்கிவிட்டான். எமிலி, புத்தகத்தை விடுதிக்குள் வைத்துவிட்டுத் திரும்பி வந்தாள். இருவரும் எட்வர்டு எல்லியட்ஸ் ரோடிலேயே நேராக நடந்துபோனார்கள். நடக்க நடக்க ஏதோ வெகுகாலம் நெருங்கிப் பழகியவர்கள் போன்ற பாச உணர்வு அவர்களுக்குள் ஏற்பட்டது.. ஆம்; பாச உணர்வு தான். அதைக் காதல் உணர்வு என்று அவர்கள் இருவருமே கருதவில்லை. கடற்கரை மணலில் போய் இருவரும் அமர்ந்தார்கள்.

கதைகளில் நடக்கும் திடீர் நிகழ்ச்சிகள் வாழ்க்கைக்கு ஒத்து வராதவை என்றுதான் அன்று வரை அவன் எண்ணியிருந்தான். திடீரென்று ஒரு பெண்ணைச் சந்தித்து உரையாடிக்கொண்டிருக்கும் நிலையை எண்ணிப் பார்த்தபோது, அவனுக்கு ஆச்சரியம் பிறந்தது. ஒரு உற்சாகமான உணர்ச்சியோடு அவளோடு பேச்சுக் கொடுத்துக்கொண்டிருந்தான்.

அவனிடத்திலே பேச வேண்டுமென்ற எண்ணம் அவளுக்கு ஏன் ஏற்பட்டது?-காரணத்தை அவள் விளக்கினாள். உடன் பிறந்த தமையன் ஒருவன் இருந்தானும் அவளுக்கு. இரண்டு வாரங்களுக்கு முன்புதான் அவன் இறந்துவிட்டானாம். அவனைப்போலவே அந்த எழுத்தாளன் இருந்ததால் அவனுடன் பேச்சுக் கொடுக்க அவள் விரும்பினாளாம். தன் கதையை முழுக்க அவள் அவனிடம் சொன்னாள்.

இளம் வயதில் கருகிப்போன மலர் அவள். வாழ்க்கையின் இன்பங்களைச் சுவைக்க வேண்டிய கட்டத்தில் வளமிழந்துபோனவள். பதினைந்தாவது வயதில் பெரியவளான அவளுக்கு, பதினாறுவது வயதில் மணம் முடித்து வைத்தார்களாம்! சரியாக ஒன்பது மாதங்களில் கணவன் இறந்துவிட்டானாம். அந்த வேதனை தாங்க முடியாமல், இரண்டாண்டு காலம் வீட்டுக்குள்ளேயே அவள் அடைபட்டுக் கிடந்தாளாம்! அதன் பிறகுகூட மறுமண நினைவு அவளுக்கு ஏற்படவில்லையாம். தாய் தந்தை அற்ற அவள், தன் அண்ணனின் துணையிலே இருந்துவந்தாளாம். அண்ணி கொடுமைக்காரியாக இருக்கவே, அங்கிருந்து வெளியேற அவள் விரும்பினாளாம். அண்ணன் தன் உறவினர் ஒருவரின் உதவியின்மூலம் அவளைச் சென்னைக்கு அனுப்பி கல்லூரியில் சேர்த்தாராம்.

அவள் தன் கதையைச் சொல்லிக்கொண்டே வரும்போது அடிக்கடி கண்ணீர் வடித்தாள். அவனிடமிருந்து அனுதாப வார்த்தைகளை எதிர்பார்த்தாள். துன்பங்களைப் பிறரிடம் சொன்னால் மனதுக்கு ஆறுதல் கிடைக்கிறது என்றாலும், கேட்பவர்களிலே கேலி செய்பவர்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள். அவன் கேலி செய்யக்கூடியவன் அல்ல என்பதை உணர்ந்தே தன் இதயத்தைத் திறந்து பேசினாள் அவள்.

அவன் அவளைத் தேற்றினான். வேதாந்தம் பேசக்கூடிய வயது அவனுக்கில்லை. ஆனாலும் அவன் வேதாந்தம் பேசினான். மிகுந்த அன்பு பாராட்டினான்.

பிறகு அவர்கள் பிரிந்தார்கள். அதன் பிறகு அவனை அடிக்கடி சந்திக்கிற வாய்ப்பை அவள் ஏற்படுத்திக்கொண்டாள். அவனுக்காக தினசரி அவள் கடற்கரையில் வந்து காத்திருப்பாள். சந்திப்பார்கள்; பேசுவார்கள். சந்திக்கமுடியவில்லை என்றால் சஞ்சலப்படுவார்கள். ஆனாலும் அது காதலாக இல்லை. அவன் மிகவும் நல்லவன் என்று அவள் நினைத்தாள். அவள் மிகவும் அன்புள்ளம் கொண்டவள்என்று அவன் நினைத்தான். ரகசியங்களைச் சிலரிடம் தானே சொல்ல முடிகிறது! இருவரும் ஒருவருக்கொருவர் ரகசியங்களை வாங்கிக் கொள்ளும் கருவிகளாக அமைந்தார்கள்.

இந்தப் புதிய பாசத்தில் ஒரு விநோதமான உணர்ச்சி இருந்தது, என்றாலும் அவர்கள் ஒருவரை ஒருவர் காப்பாற்றக்கூடிய நிலையிலே இல்லை. பெல்ஸ் ரோட்டிலிருந்து மூன்று மைல் தூரம் ஐ. ஜி. ஆபீஸ் கடற்கரைக்கு அவன் நடந்தே வருவான். "நடந்தா வந்தீர்கள்! ஐயோ கால் வலிக்குமே!" என்று அவள் வருந்துவாள். தன் துயரத்தைப் பகிர்ந்துகொள்ள இன்னொருவர் இருந்தால் மனதுக்கு ஆறுதல் கிடைக்கிறது. அதுவும் அவள் பெண்ணாக இருந்தால் எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுகிறது! ஆதாரமில்லாமல் எதுவும் நிற்பதில்லை. எதன் துணையுமின்றி தனித்தியங்கும் பொருள்களே இல்லை. ஓரணுவும் இன்னொரு அணுவின் துணையில்தான் இருக்கிறது என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். ஒன்றுக்கொன்று உதவியாக இருப்பதால்தான் உலகத்தின் ஒவ்வொரு பிரிவிலும் ஏற்படும் குழப்பங்கள் சமாளிக்கப்படுகின்றன. அவளும், அவனும் ஒருவருக்கொருவர் ஆதாரமானார்கள். இரண்டு அனாதைகள் அன்புள்ளத்தோடு கூட்டுச் சேரும் நிலைதான் அது.

அவன், காய்கறி வாங்கிய வகையில் மிச்சம் பிடித்த காசை பத்திரமாகக் கடற்கரைக்குக் கொண்டு வருவான். வறுகடலையும், முறுக்கும் வாங்கி அவளுக்குத் தருவான். அவை மிகச் சாதாரணமான பொருள் தான். ஆனால் அவன் தருகிறான் என்பதாலே அவளுக்கொரு திருப்தி.

ஒருநாள் இப்படி அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போது, அவளுடைய கல்லூரித் தோழிகள் சிலபேர் அங்கே வந்துவிட்டார்கள். எதைப் பற்றிப் பேசினாலும், ஆணும் பெண்ணும் தனியாக இருந்து பேசினால் அது காதல் என்று தானே உலகம் முடிவுகட்டுகிறது. அந்தத் தோழிகள், எமிலிக்கு அவன்மீது காதல் பிறந்துவிட்டதாகக் கருதினார்கள். தூரத்திலிருந்தே அவர்களைக் கேலி செய்ய ஆரம்பித்தார்கள். அவள் அவர்களை அருகில் அழைத்து உட்கார வைத்துக்கொண்டாள். அவனை அவர்களுக்கு அறிமுகப்படுத்தினாள். அப்போது அவன் மிரண்டே போய்விட்டான். பட்டினத்துக் கடற்கரையில், பத்துப் பெண்களுக்கு மத்தியில் தான் உட்கார்ந்து பேசுவோம் என்று சிந்தித்ததுகூட இல்லை. அவர்கள் எல்லோருமே அவனை ஒரு குழந்தை மாதிரி கருதினார்கள். அதற்குப் பிறகு, அடுத்தடுத்த நாட்களில் அவள்கூட இரண்டொரு தோழிகளும் வர ஆரம்பித்தார்கள். அவளைச் சந்திப்பதிலும், பேசுவதிலும் அவன் அதிக அக்கரை காட்டி அடிக்கடி கடற்கரைக்கு வர ஆரம்பித்ததால் அவனுக்கு இருந்த ஒரே உத்தியோகமும் போய்விட்டது. அவனது உறவினர் திருவொற்றியூரிலிருந்த அஜாக்ஸ் தொழிற்சாலையில் அவனை ஒரு குமாஸ்தாவாகச் சேர்த்துவிட்டார். சாப்பாடு போட்டு மாதம் இருபது ரூபாய் சம்பளம். அதை வாரத்திற்கு ஐந்து ரூபாய் வீதம் கொடுப்பார்கள். ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை மாலை அந்த ஐந்து ரூபாய் கிடைக்கும். அதை வாங்கிக் கொண்டு அவன் சென்னை வந்து விடுவான். ஞாயிற்றுக்கிழமை சென்னை நகரில் சுற்றுவான். எமிலியையும் தோழிகளையும் சந்திப்பான். திங்கட்கிழமை காலை திருவொற்றியூருக்குத் திரும்பி விடுவான்.

திருவொற்றியூரிலே தான் பட்டினத்தார் சமாதி இருக்கிறது. அதுவும் அஜாக்ஸ் தொழிற்சாலைக்குச் சிறிது தூரத்தில்இருக்கிறது. ஒரே வெண்மணற் பாங்காக இருந்த அந்த பூமியில் சிறிய, பழைய சமாதிக் கட்டிடம் அமைந்திருந்தது. வேலை முடிந்ததும்,மாலை நேரங்களில், அந்தச் சமாதி அருகில் அவன் வந்து அமருவான். சிந்திப்பான்; பழக்கமான கற்பனையில் பறப்பான். இருட்டியதும் திருப்பிவிடுவான். சொல்லப்போனால் திருவொற்றியூர்தான் அவன் எழுத்தாளனாவதற்கான சூழ்நிலையை வளர்த்தது.

இரண்டு வாரங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் சென்னைக்கு வராமலே அவன் இருந்தான். காரணம் எதுவும் இல்லை. வாரக் கடைசியில் கிடைக்கும் ஐந்து ரூபாயை கடைகளுக்குக் கொடுத்து பாக்கியைத் தீர்த்ததால் கையில் பணமில்லை; அவ்வளவுதான்.

மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை அவன் சென்னை திரும்பியபோது ஒரு பெரிய அதிர்ச்சி அவனுக்காகக் காத்துக்கிடந்தது.

(தொடரும்)

அறிவிப்பு

ஆசிரியருக்குத் தனிப்பட்ட முறையில் கடிதம் எழுதும் நண்பர்கள்; தயவுசெய்து கீழ்க்காணும் முகவரிக்கு எழுதவும்:

கண்ணதாசன்,
4, லலிதாபுரம் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை-14.

— 1ம் பக்கத் தொடர்ச்சி —

அலறி வீழ்ந்ததை 'புயற்காற்று சூறை தன்னில் திமு திமென மரம் விழுந்து காடெல்லாம் விறகான செய்திபோல' என்று ஆவேசத் திளைப்போடு ஜார் வீழ்ச்சியைச் சித்தரித்தான் பாரதி.

'மணிவெளுக்கச் சாணை யுண்டு' என்று முத்துமாரியிடம் சொல்லும்போது, 'மனம் வெளுக்க வழியில்லை' என்பதையும் கூடவே சொல்கிறான் பாரதி.

இத்தனை இருந்தும் அந்த நாளில் பலர் பாரதியைக் கவிஞனாகக்கூட ஏற்றுக்கொள்ளவில்லை. 'இதெல்லாம் கவிதையா? இலக்கணமில்லையே' என்றோரும் உண்டு. மறைந்த கல்கியார் பாரதியின் கவிதைகளைக் கண்டித்து விகடனில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். 'அட்சரம் லட்சம் பெறும்' என்று பாராட்டிய வ. வே. சு. ஐயர், நெல்லையப்பர் போன்ற சிலர் தான் பாரதியின் மகத்துவத்தைப் பூரணமாகப் புரிந்துகொண்டு போற்றினார்கள்.

சமுதாயத்தின் இழிநிலையை அறிந்த பாரதியை விடுதலைப் போராட்டம் பெரிதும் கவர்ந்தது. ஆவேசமும், தாயகப்பற்றும் நிரம்பிய கவிதைகளும் கூடவே பிறந்தன. தேசியம், பற்றி எரிந்து, சாம்பலான நாட்களுக்குப் பிறகு பாரதியின் பெருமை நாடெங்கும் பேசப்பட்டது. கம்பனிலே மட்டும் எல்லாம் கண்டு மகிழ்ந்திருந்த 'தந்தக்கோபுர வாசிகள்' கூட பாரதியைக் கொண்டாடிப் புகழ்ந்தார்கள். அதுவரை அவனை 'ஆழாக்கு அரிசிக்கு' அலையவிட்ட தேசீயம் பிறகு பாரதியைத் தனது கவிஞனாக்கிக் கொண்டது!

உண்மையான பாரதி - உணர்ச்சியுள்ள பாரதி மக்களிடமிருந்து மறைக்கப்பட்டான்! 'வந்தே மாதரத்திலும்' 'தாயின் மணிக்கொடியிலும்' அவன் புகழ் தங்கி நிற்கவில்லை. பாரதியையே திமிறிக்கொண்டு பொங்கிப் புரண்ட பிரளயம்... தேசியத்தின் சாண் கயிற்றால் அவனைப் பிணைக்க எண்ணுவது பேதமை. இதனால் கவிஞனின் புகழுக்குச் சிலர் குறுகிய கால அளவை நிர்ணயிக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும்.

பாரதியிடம் தேசீய எழுச்சி இருந்தது; மறுப்பதிற்கில்லை. அது அவனது பெரும் உழைப்பிலே சின்னஞ்சிறு பகுதி. பிரசித்தமான உணர்ச்சிக் கவிதைகளை, அழியாத காவியங்களை பாரதி எழுதியிருக்கிறான். 'கட்சி அரசியலும்' நடைமுறைத் திட்டங்களும் நிலையானதல்ல. மக்களின் மனம் திரிந்துவிடும்போது அவை மதிப்பற்றதாகி விடுகின்றன.

எண்ணற்ற ஏடுகள் எழுதியவன்கூட ஒரு குறிப்பிட்ட நூலால் தான் புகழ்பெறுகிறான்.

பாரதியின் மற்ற கவிதைகளைவிட தேசியப் பாடல்கள் பெரும் அளவிற்கு நாட்டோரிடம் அறிமுகப்படுத்தப்பட்டன. பாரதி பெறவேண்டிய நியாயமான புகழ் அழிந்து விடாது, இதனால். காலம் கனியவேண்டும், அவ்வளவு தான்!

'பொழுது புலர்ந்தது; புண்மை இருட்கணம் போயின யாவும்' என்றான் பாரதி. 'ஆருயிரே! பள்ளி எழுந்தருளாயே!' என்று எழுச்சி செய்தான்.

'நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும் நேர்பட வைத்தாங்கே, குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு மோக வெறிபடைத்த' பாரதியின் கவிதைச் சிறப்பு வெறும் காலத்தின் சுழற்சியில் மறைந்தா விடும்?

தமிழ் முழு எழிலோடு பாரதியிடம் தவழ்ந்தது. சொற்களின் அடுக்கும் சுவையும், இசை தப்பாது ஒலிக்கும் தன்மையும் எண்ணி எண்ணிப் பூரிக்கத் தக்கது. புதிய இனிப்புச் சுவடிகளையே பாரதி முதன் முதலாக எழுதிப் போயிருக்கிறான்.

'பாஞ்சாலி சபதமும்' 'குயிற் பாட்டும்' அளவில் சிறிதானாலும் அவற்றில் காவிய அழகு நிறைந்து ததும்புகின்றது. 'பாஞ்சாலி சபதம்' பாரதியின் அமைதியான கவித்துவத்தின் படைப்பு. எளிமையும், அழகும் இதன் தலையான சிறப்புகள். பின்னாளில் தோன்றிய பல காவியங்களுக்கு இது ஒரு வழிகாட்டி. கதையைப்பற்றிய பிரச்னைக்கே இடமில்லை. புராண பாத்திரங்கள் அத்தனையும் கற்பனை என்று மட்டுமல்ல, அவற்றின் முரண்பாட்டையும் பாரதி குறிப்பிட்டிருக்கிறான்.

> "நன்று புராணங்கள் செய்தார்! —அதில்
> நல்ல கவிதை பல பல தந்தார்.
> கவிதை மிக நல்லதேனும் —அக்
> கதைகள் பொய்யென்று தெளிவுறக் கண்டோம்."

பிறர்க்கு பாரதி வகுத்த 'இலக்கணம்' இப்போது அனுசரணை பயன்படுகிறது! உலகப் புகழ் பெற்ற கவிஞர் பலர் தங்களின் காவியங்களுக்கு பழைய கதைகளையும், புராண நிகழ்ச்சிகளையுமே தேர்ந்தெடுக்கிறார்கள். இவைகளில் வரும் பாத்திரங்கள் அண்மைக்காலப் படைப்புகளல்ல. பரம்பரை பரம்பரையாக மனித நெஞ்சில் வாழ்ந்து பண்பட்டுப் போன குணச் சித்திரங்களை இதய உணர்வோடு சித்தரிப்பது கவிஞர்களுக்கு எளிது. மொழி வண்ணத்தின் நெருங்கிடும்போது காவியமே பொலிவு பெறுகிறது. பாரதிமட்டும் இதற்கு விதி விலக்கா, என்ன?

முத்தொளிர் மாடங்களும், எங்கும் மொய்த்தளி சூழ் சோலைகளும் நிறைந்த அத்தினபுர சிறப்போடு துவங்கி, ஆரிய வேல் மறவர் புவியாண்ட சரித்தத்தை அழகாகச் சொல்கிறான் பாரதி.

> "அன்னங்கள் பொற்கமலத் தடத்தின் ஊர
> அளிமுரலக் கிளிமழலை அரற்றக் கேட்போர்
> கன்னங்கள் அமுதூறக் குயில்கள் பாடும்
> காவினத்து நறுமலரின் கமழைத் தென்றல்
> பொன்னங்க மணிமடவார் மாட மீது
> புலவிசெயும் போழ்தினிலே போந்து வீச..."

இதுபோன்ற நாட்டுச் சிறப்பிலும், சூதாட்டப் படலத்திலும் பல நல்ல கவிதைகள் இருக்கின்றன.

வாசிப்போரின் இதயத்திலே காட்சியின் கோடுகள் படிவதற்கு, பாரதி அதிக சிரமம் எடுத்துக் கொள்ளவில்லை. சொற்கள் இயல்பாகவே விழுகின்றன. 'தாயமுருட்டலானார்- அங்கே சகுனி ஆர்ப்பரித்தான்' எனும் கவிதையில் பகடைகள் உருள்கின்றன! சகுனியின் ஆர்ப்பரிப்பே கேட்கிறது! ஒத்திசைப்பிற்காக பாரதி தேர்ந்தெடுத்த இசையும், பாடலின் வரிக்கோர்வையும் அவனது நிறைந்த புலமையின் சான்றுகள்!

புதிய உவமைகள் காவியத்தின் மற்றொரு சிறப்பு.

'பாஞ்சாலி சபதம்' ஆயிரத்தி ஓர் இரவுகளைப்போல பாரதியின் ஒரு 'அளப்பு.' ஹோமரின் 'இலியட்டை'ப் போல கவிதை அழகில் இது இணையற்றது.

'குயில் பாட்டு' கவிஞன் கண்ட கனவு. வேடர் வராத விருந்து திருநாளிலே பேடைக் குயிலொன்று கவிஞனிடம் கதை பேசுகிறது. குயிலின் காவியம்- அதுவும் காதல் காவியம். அழகான அகவல் நடை; வசீகர வர்ணனைகள், சிறப்பிற்குக் கேட்கவா வேண்டும்? பாரதியின் இந்தப் பாணி தமிழுக்கே புதிது!

உண்மையான பாரதி இது போன்ற காவியங்களில் வாழ்கிறான். பக்தி இந்த நாட்டிலே ஏராளமாக அறுவடையாகிறது. அதனைப் போதிக்க பாரதி வேண்டியதில்லை. எத்தனையோ பண்டாரங்கள் இருக்கிறார்கள். அவர்களே போதும்!

பாரதி தமிழைத் தேனாக, புயலாக, நெருப்பாகக் காட்டிய கவிச்செல்வன்.

இலக்கிய வானத்திலே அவன் தோன்றி மறையும் விண் மீனல்ல — நிலைத்து வாழும் ஒற்றை நிலவு!

யுக யுகாந்தரங்களில் அவன் திருப்பெயர் ஒலித்துக்கொண்டு தானிருக்கும்! ஏனெனில் பாரதி மனித உள்ளத்தைத் தொட்டு எழுதிய மாகவிஞன்!

-இரா. இளஞ்சேரன்

வடாற்காடு மாவட்ட தி. மு. க. 3-வது மாநாடு

செப்டம்பர் 21, 22 தேதிகளில் திருவண்ணாமலை சாமி அரங்கில் நடைபெறும்.

21—9—'57 அன்று

இந்தி எதிர்ப்பு மாநாடு

தலைவர் :
அருணகிரிநாதர்

திறப்பாளர் :
சி. வி. எம். அண்ணாமலை

22—9—'57 அன்று

தி. மு. க. மாநாடு

தலைவர் :
அன்பில் தர்மலிங்கம்

திறப்பாளர் :
வெ. கிருஷ்ணமூர்த்தி

அறிஞர் அண்ணா, பொதுச்செயலாளர்

மற்றும் கழக முன்னணி வீரர்கள் கலந்து கொள்வர்

காரைக்குடியில் இந்தி எதிர்ப்பு!

நாடெங்கும் இந்தி கட்டாயமாகத் திணிக்கப்படுவதை எதிர்த்து செப். 5ல் அழகப்பா கலைக்கல்லூரி மாணவர்கள் கல்லூரிக்குச்செல்லாது மகத்தான ஓர் ஊர்வலம் நடத்தினர். கல்லூரி முதல்வர் திரு. அலெக்சாந்தர் ஞானமுத்து, இந்தித் திணிப்பை எதிர்ப்பவர்களில் முதன்மையானவராகத்தன்னைக் குறிப்பிட்டு, ஊர்வலம் ஒழுங்காக நடக்க வேண்டுமென்று கூறி மாணவர்களை அனுப்பி வைத்தார். 700-க்கும் மேலான மாணவர்களும், ஆசிரியர்களும் கலைக்கல்லூரியிலிருந்து புறப்பட்டு, "இந்தியைத் திணிக்காதே" "இந்தித் திணிப்பை எதிர்ப்போம்" என்று முழக்கமிட்டவாறு முக்கிய தெருக்கள் வழியாகச்சென்று காந்தி சதுக்கத்தை அடைந்தனர். மாணவர் தலைவர் திரு. க்ரு. மாணிக்கம் "தாய்மொழிக்கு இந்தியால் எவ்வித ஊறும் நேராது என மக்களாகவே உணர்ந்து அதனை விரும்பிக்கற்க முற்படுகிறவரை இந்தியைத் திணிப்பது விரும்பத்தக்கதல்ல" என்று பேசினார். பின்னர், இந்தித் திணிப்பை எதிர்த்துத் தீர்மானம் ஒன்று செயலாளரால் வாசிக்கப்பட்டு பலத்த கையொலியோடு நிறைவேற்றப்பட்டது.



பன்மொழிப்புலவர் பதில் தருகிறார்

ஆ.ச. மாறன், திரிகோணமலை.

தொல்காப்பியத்தில் எத்தனை அதிகாரம் உண்டென்பதையும், அவைகள் எவை என்பதையும், ஒவ்வொன்றும் எதையெதை விளக்குகின்றன என்பதையும் உரையாசிரியருள் சிறந்தவர் யார் என்பதையும் தெரிவிக்கவும்.

தொல்காப்பியம் 1610 நூற்பாக்கள் அல்லது சூத்திரங்களடங்கியது. எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று பெரும் பிரிவுகள் அல்லது அதிகாரங்களும், அவை ஒவ்வொன்றிலும் ஒன்பது ஒன்பது இயல்களாக மொத்தம் 27 இயல்களும் உடையது.

எழித்ததிகாரம் எழுத்தின் இலக்கணமும் புணர்ச்சியும் கூறுவது. அதன் ஒன்பது இயல்கள் நூன் மரபு, மொழி மரபு, பிறப்பியல், புணரியல், தொகை மரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என்பன. நூன்மரபு தமிழ் மொழியின் முன்னை இலக்கண நூலரளர் ஆய்ந்து கூறிய கலைச்சொல், கலைவழக்கு முதலிய மரபுகளையும், மொழி மரபு, தமிழ் மொழிக்கே இயல்பான மரபுகளையும் கூறி எழுத்தின் பொது இலக்கணம் தெரிவித்தன. பிறப்பியல் எழுத்துக்களின் ஒலி வடிவம் எவ்வெவ் உறுப்புக்களின் கூட்டுறவால், எம்முயற்சியால் பிறக்கின்றன வென்னும் தற்கால ஒலிநூல் (Phonetics) கருத்துக்களை உணர்த்தும் பகுதி. புணரியல் புணர்ச்சி பற்றிய பூர்வாங்கமான பொது முன்னுரைகளையும், தொகை மரபு புணர்ச்சிப்பொது விதிகளையும், உருபியல் உணர்ச்சியிடையே தோன்றும் இடைச்சொற்பகுதிகளையும் விளக்கின. இறுதி மூன்று இயல்களும் புணரியலுக்குரிய தனிச்சிறப்பு விதிகளை, உயிரீறு, மெய்யீறு, குற்றியலுகரவீறு எனப்பிரித்துக்கூறுகின்றன.

சொல்லதிகாரம் சொல்லின் இலக்கணம், வகைகள் வேற்றுமைகள் ஆகியன உணர்த்துகிறது. அதன் ஒன்பது இயல்கள் கிளவியாக்கம், வேற்றுமையியல் வேற்றுமை மயங்கியல், விளிமரபு பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் என்பன. இவற்றுள் கிளவியாக்கம் சொல்லின் பொது இலக்கணம் கூறிற்று. பெயர், வினை இரண்டுக்கும் உரிய திணை பால் எண் இடம் இதில் விளக்க முற்றது. பெயருக்கேயுரிய வேற்றுமை இலக்கணம் அடுத்த மூன்று இயல்களிலும் வகுக்கப் பட்டது. அடுத்த நான்கு இயல்கள் பெயர், வினை, இடை, உரி என்ற நால் வகைச்சொற்கள் பற்றியவை. இறுதி எச்சவியல் சொல்பற்றிய இலக்கிய மரபுகளும் மொழி மரபுகளும் விளக்கிற்று.

பொருளதிகாரம் அகப்பொருள் புறப்பொருள் இலக்கணங்களும் அவற்றின் மரபும் கூறுவதுடன், செய்யுள் வகைகளும் அணிவகைகளும் விரித்துரைக்கின்றது. அதன் ஒன்பது இயல்கள் அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல் பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் என்பன. முதல் இரண்டு இயல்களும் அகப் புறத்திணைகளையும், அடுத்த இரண்டு அகத்தின் ஒழுக்கப்பிரிவாகிய களவியல் பற்றியும், கற்பியல் பற்றியும், ஐந்தாம் இயல் பொதுவாகப் பொருள் இலக்கணம் பற்றியும் கூறுகின்றன. மெய்ப்பாட்டியல் இயல் இலக்கியத்தின் உள்ளார்ந்த நாடகப் பண்புகளின் இலக்கணம். நாடகத் தமிழ் இலக்கணத்தில் விரித்துக்கூறப்படும் பகுதி இங்கே இயலுக்குரிய அளவில் சுட்டிக் காட்டப்பட்டது. உவமவியல் இதுபோலவே பிற்காலத் தமிழ், சமஸ்கிருத வாணரின் அணி அல்லது அலங்காரத்தின் மூல முதல் இலக்கணமாகும். செய்யுளியல் பிற்காலச்செய்யுளிலக்கணம் அல்லது யாப்பிலக்கணம் கூறும் பகுதியே. மரபியல் தமிழ்ச்சொற்களின் பொருள் கடந்த மரபு வழக்குகளை வகுத்துரைப்பது.

தொல்காப்பியத்துக்குக் கல்லாடர், இளம்பூரணர், பேராசிரியர், நச்சினர்க்கினியர் ஆகியவர் உரைகள் இயற்றியுள்ளதாக அறிகிறோம். கல்லாடர் உரை அச்சானதாகத் தெரியவில்லை; ஏட்டுப்படியில் இருப்பதாக அறிகிறோம். இளம்பூரணர், நச்சினர்க்கினியர் உரைகள் கிட்டத்தட்ட முழுவதும் உள்ளன. மற்ற இருவரது உரைகள் ஒவ்வோரதிகாரம் அல்லது

காலத்தால் முந்தியது இளம்பூரணர் உரை. பிந்தியது நச்சினர்க்கினியர் உரை. மற்ற இருவரும் அதிகாரப் பகுதிகளே உள்ளன. சமஸ்கிருதப் பற்று மிக்க இடைக் காலத்தவர். அதே சமயம் இரு மொழிப் புலமை சான்றவர்.

எது சிறந்த உரை என்பது அவரவர் விருப்புக்கே உகந்தது என்னல் வேண்டும். ஆனல் யாரும் மேற்கோளாகக்கொண்ட முதலுரையாகிய இளம்பூரணருரையே சிறந்ததென்றும், அதனைத் தழுவிய நச்சினர்க்கினியருரையே விளக்கமானதென்றும், ஏனையவை விளக்கும் பகுதிகளுக்கு ஒப்பு நோக்கத் தக்கவை என்றும் கூறலாம்.

உரைகள் எதுவும் கி.பி. 9-ம் நூற்றுண்டுக்கு முற்பட்டவை அல்ல. அவை தொல்காப்பியர் காலத்தைவிட நம் காலத்துக்கும் நன்னூல் முதலிய மற்ற இலக்கண நூலாருக்குமே அணிமையானவை. ஆகவே அவை தொல்காப்பிய ஆராய்ச்சிக்கு உதவுபவை மட்டுமேயன்றி வேறல்ல. அவற்றினிடையே உள்ள பொருள் விளக்க வேற்றுமைகள் மிகுதி. அனைவரும் மயங்கித்தலை தடுமாறும் இடங்களும் உள. மேலும் தொல்காப்பியர் இக்கால மொழி நூலாருக்கே உரிய மொழி நூலுணர்ச்சியுடையவர். இக்கால, வருங்கால ஆராய்ச்சியன்றி உரைகள் தொல்காப்பியர் உட்கோளை விளக்கத்தக்க சிறப்புடையன அல்ல. ஆயினும் அவை இல்லாவிடின் அந்த ஆராய்ச்சிக்கு இன்றிருப்பதைவிட மிகுதி குந்தகம் இருக்கும் என்பதை மறுக்க முடியாது.

மருத. இராசேந்திரன்,
மதுரை.

ஆசிரியப்பாவின் இலக்கணம் யாது? சென்ற இதழில்' எண்ணம்' தலையங்கத்தில் வெளியான கவிதை எவ் வகையைச் சார்ந்தது?

ஆசிரியப்பா பெரும்பாலும் ஆசிரியச்சீர் அல்லது அகவற்சீர் அல்லது இயற்சீர் என்ற ஈரசைச் சீர்களால் இயங்க வேண்டும். நேரசையில் முடியும் மூவசைச்சீராகிய காய்ச்சீர் சிறுபான்மையாகவும், நிரையசையில் முடியும் மூவகைச் சீராகிய கனிச்சீர் இன்னும் சிறுபான்மையாகவுமே வருதலாகும் ஆனல் கனிச்சீர்களுள் இரண்டு நிரையசையில் முடியும் கூவிளங்கனி, கருவிளங்கனி வருதல் கூடாது.

ஆசிரியப்பாவுக்கு தளை வரையறை கிடையாது. ஆசிரியத்தளையும், வெண்டளையும்விரவிவரலாம். பிறதளைகளும் வரலாம்.

ஆசிரியப்பா குறைந்தது மூன்றடிகள் உடையதாயிருந்தல் வேண்டும். கூடுதலாக எத்தனை அடியும் இருக்கலாம். ஆயிரம் என்று கூறுவது வழக்கம். பெரும்பாலான அடிகள் பொதுவாக நாற்சீரடிகளே. ஆனல் மூன்றும் இரண்டும் வருதல்கூடும். இந்த இறுதி விதியை ஒட்டியே, ஆசிரியப்பாவின் வலகைள் அமைந்துள்ளன. குறைந்த அடியே இல்லாதிருந்தால் அது நிலைமண்டில ஆசிரியப்பா என்றும், கடைசிக்கு முந்திய அடி மட்டும் மூன்று சீராயிருந்தால் அது நேரிசை ஆசிரியப்பா என்றும், முதலடியில் கடைசியடியும் நாற்சீராய், மற்றயவை பல வகையில் குறைபட்டு வந்தால் இணைக்குறள் ஆசிரியப்பா என்றும் பெயர்பெறும்.

நாலடி சொண்ட ஆசிரியப்பாவின் பாவினங்கள் ஆசிரியத்துறையும், ஆசிரிய விருத்தமும் ஆகும். முதல்வகை மூன்ருமடி மட்டுமோ, முதலடியும் மூன்ருமடியுமோ மற்ற அடிகளில் குறைந்து வருவது. பிந்திய வகையான விருத்தம், அறுசீர் அல்லாது அதற்கு மேற்பட்ட சீர்களைக்கொண்டு நாலடியும் ஒத்துவருவது.

மணிமாறன், திருச்சி,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார் இறைவன் அடி சேராதார்" என்ற குறளுக்கு "கடவுளின் அடியைச் சேர்ந்தவர்கள்தான் இப்பிறவிப் பெருங்கடலை நீந்தமுடியும்" என்று கூறுவது பொருந்துமா? பொருந்துமென்ருல் எப்படி?

கடல் மனிதர் வாழ்வதற்குரிய இடமன்று. பயணம்செய்து கடந்து, கரையேறுதற்குரிய இடமே. குடும்பம், சமுதாயம், உலகம் என்ற விரிவெல்லைகள் கடந்து பரந்த வாழ்வும், இதுபோலக் கடல்போல, பார்வைக்குக் கரையற்று விரிந்ததாயினும், அதற்கு ஒரு கரை உண்டு; நோக்கம் உண்டு. அதுவே 'இனம்' என்பது. குடும்பம், சமுதாயம், உலகம் ஆகிய முப்பரப்பிலுமே தனி மனிதன் உடல் வாழ்வு கடந்து, முன்னும் பின்னும் நீடித்து நிலவும் இனம் குறிக்கோளாகாவிட்டால், மனித நாகரிகமில்லை; பண்பில்லை; கடவுளில்லை; சமயங்களில்லை; அறமில்லை; ஒழுக்கமில்லை; நன்மை தீமை இல்லை. நிலையான கரையும், குறிவரையறையும் இல்லாதவிடத்துத் திசை இல்லாததுபோல, அடிநிலம் இல்லாதபோது மேல்கீழ் இருக்கமுடியாதது போல, இனமின்றேல் இவை எதுவும் இல்லையாய்விடும்.

இனமாகிய வாழ்வின் மூலதளம், இனமுதல் தான் திருவள்ளுவர் குறிக்கொண்ட இறைவன். இக்கருத்தே எல்லாச் சமயங்களுக்கும் அடிப்படை. இதையறியாதார் எச்சமயத்தையும் அறிய முடியாது. எப்படியோ குறள் உலக நாகரிகத்தையும் சமயங்களையும் கடவுள் மேல் இயக்கி, அவற்ருல் இன்னும் உணரப்படாமல் இருக்கிறது.

திருவள்ளுவர் பண்பு, கல்வி, அறம், அன்பு, அருள், இன்பம் ஆகிய எல்லா நாகரிகக் கூறுகளையும் 'இறைவன்' என்ற ஒரு திசை அல்லது குறி நோக்கிச் செல்வன என்று கொண்டார் இறைவனடி சேர்தல் என்பது இவை கைவரப் பெறல் என்பதே.

இறைவன் இனவாழ்வின் இன இலக்கு, குறிக்கோள் அதற்கான பாதைகள் படிகளே கல்வி, பண்பு, அறம் முதலியன இம்முழுமுதலை முழுதும் எந்தத் தனி மனிதனும் அடையமுடியாது. அது இன முழுவதன் குறிக்கோள். ஆனல் அத்திசையறிந்து சென்று, பிறர்க்கு அத்திசை காட்டி நிற்பது, வழிகாட்டிய காந்தியடிகள் போன்ற சான்றோர்போல் இலக்கிய ஒளி வீசி நிற்பதுதான் இறைவன் அடி சார்தல் ஆகும். அவ்வாறு பண்பு வழி சென்று சான்றோராகாதார் வாழ்வில் மிதப்பவர், இலக்கடைவதில்லை.

இதுவே குறட்பாவின் பொருள் என்க.

பிறப் பிறப்பாகிய கடல் என்ற தற்காலக் கருத்து புத்தர்பிரான், வள்ளுவர் காலக்கருத்தை பிறஉணர்ந்ததனல் ஏற்பட்ட பிழை ஆகும். கீழ்நாட்டுச் சமயங்களனைத்தும் புத்த நெறியின் இவ்வழுவை ஏற்றுத்திசை மாறியுள்ளன. ஆனல் இன்றும் பார்சி நெறி, யூதநெறி, கிரிஸ்தவநெறி இஸ்லாமிய நெறி ஆகாய மேலை நெறியுகள் வள்ளுவர் மரபில் பிறழாமல் நிற்பது காணலாம்.

மயக்கம்

வேழப் படைத் தலைவன் — பெயர் மாறன். வேந்தர் மன்னர் மன்னனின் தளபதி - களம்பல கண்டவன். களம்புகுந்தான் மாறன் என்ருல் அவன் பக்கம் வீழ்ச்சியில்லை. விருதுகள் பலவுண்டு. வெற்றிக்கு அறிகுறி அவன் உடலில் நாம் காணும் தழும்புகள் தான். அவனைக்காணும் வாய்ப்பு பெற்ருேர் எவரும் இவனு அவ்வீரன்? என வாய் பிளந்து நிற்பர். ஏனெனில் அவனுக்கு வயது இருபத்தைந்திற்கு மேல் இராது.

விண்ணையும் முட்டும் விழுச்சீர் கொண்ட அவன், அழகின் உறைவிடமும் கூட. களம் புகுந்தான்; வெற்றி கண்டான். வீரனுக்குரிய ஏறு நடைபோட்டு வீடு திரும்புகிருன். இடையிலே காட்டைக் கடக்கும் நிலை. பாய்ந்து வரும் புலியொன்று பட்டது அவன் கண்ணில். வீரனல்லவா அவன்! அதுவும் புறமுதுகு காட்டா தமிழன் மரபல்லவா அவன் மரபு. அது மட்டுமல்ல அவன் சீற்றத்திற்குக் காரணம்; புலியின் நகமொன்று கேட்டிருந்தாள் அவன் இல்லத்துப் பொற்கொடி—தாலியோடு சேர்த்துக் கோர்த்துக்கொள்ள. அதைக் கொண்டு போய்க் கொடுத்தால் பரிசில்—ஆம்—காதலியின் கணக்கற்ற முத்தங்கள் — உண்டு அவனுக்கு. அப்படியொரு பந்தயம் அவர்களுக்குள்! நெஞ்சிலே நினைப்பூர, நாக்கிலே நீரூர நினைவு அலைகள் மோதின. இவ்வளவும் வினாடிப் பொழுது.

மாறனின் ஈட்டியொன்றுபுலியின் வயிற்றினிலே பாய்ந்தது அலறலொன்று கேட்டது - அது கேட்ட புள்ளினங்கள் படபட வென்று சிறகடித்துப் பறந்தன மரத்தின் கிளைகளிலிருந்து. வீழ்ந்துபட்ட புலியின் நகத்தினைப் பறித்திட்டான் மாறன். வீடு செல்லும் வழியெல்லாம் வேல்விழியாளின் முத்தங்கள் பற்றிய எண்ணம்தான் வீரனுக்கு.

வீட்டிற்குள் நுழைந்ததும் 'மங்கை' என்ருன்.

'அத்தான், போரின் முடிவென்ன?' என்ருள்.

'போர்க்களம் புகுந்து, புறமுதுகு காட்டி வீட்டிற்குத் திரும்பும் கோழையென்று நினைத்தாய் என்னை ?'

'கோபிக்காதீர்களத்தான். யானைக்கும் அடிசறுக்கும் என்பார்களே, அதனுல்தான் கேட்டேன்'' என்ருள்.

'வெற்றியன்றி வேறென்ன தெரியுமெனக்கு? அத்தோடு, நெடுநாளாய் நீ கேட்ட பொருளொன்றும் கொணர்ந்துள்ளேன். என்னவென்று சொல் பார்ப்போம்!'' என்ருன்.

'சோசியம் எனக்குத் தெரியாதே' என்ருள்.

பேச்சை விட்டொழித்து, சத்தான முத்தமொன்று தந்திடு' என்ருன்.

'கொண்டு வந்த பொருள் என்னவென்று சொல்லுங்கள். கணக்கற்றவை கிடைக்கும்' என்ருள்.

'அச்சாரம் உண்டோ?' என்ருன். இச்... சென்ற ஒலி ஒன்று கிளம்பியது. 'புலியின் நகமொன்று பறித்துக்கொண்டு வந்துள்ளேன்!' என்ருன்.

'பறித்தது நீராயிருக்கலாம் ஆனுல், கொன்றது யார்?' என்ருள்.

'என் மீது சந்தேகம் உனக்கிருப்பின் புலியொன்று கொண்டு வா. அதை வதைத்து நகமெடுக்கும் வீரம் என்னிடம் உள்ளதா இல்லையா என்றுபார்!' என்ருன்.

குறும்பொன்று செய்ய எண்ணிஞள். 'அய்யய்யோ, அத்தான் காலடியில் பாம்பு என்ருள்

விழி தொடுக்கும் கணையில் சிக்கிய அவ்வீரன், சிந்திக்க நேரமின்றி உடல் பதற, உள்ளம் பதற அக்கிளிமொழியாளை கட்டியணைத்துப் பின் 'எங்கே' என்ருன்.

'தோற்று விட்டீர்! என்னிடம் தோற்று விட்டீர்!' என்று குதியாட்டம் போட்டாள் அந்தக் குறும்புக்காரி. வெட்கித்தலை குனிந்தான் அவ்வீரன்.

'என்னிடம் தோற்ற நீர், புலியைக்கொன்றதாக எவ்வாறு நான் நம்புவது?' என்ருள்.

'மங்கை' மதுவென்று பொருளொன்று இருக்கிறதே, அது உண்டவரிடத்தே மட்டும் மயக்கம் உண்டு பண்ணும் நிலைமை உடையது. ஆனுல் காமம் இருக்கிறதே அது தன்னை நினைக்கும் ஒருவரிடத்திலும், நினைத்த மாத்திரத்திலேயே மயக்கம் உண்டு பண்ணும்நிலையை உடையதாம்!

'அது மாதிரி, களம்பல கண்டவன்தான்—வாள் வீச்சை எதிர்த்துப்போரிட்டு வெற்றி கண்டவன் தான், என்ருலும், உன் கண்வீச்சின் எதிரே, நான் செயலிழந்து வருகிறேன்' என்ருன்.

'எப்படி?' என்ருள்

'கண்ணின் கடைப்பார்வை நீ காட்ட, அதில் நானுேர் வீரனென்ற நிலை மறந்து களித்திருக்க, அவ்வேளை நீ பாம்பென்று என்னைப் பயம்காட்ட, பயத்தால் அலறி உன்னிடம் தோற்றேனே' என்ருன்.

'அத்தான், என்னைக் கோபிக்காதீர்கள். குறும்புடன் கூடி விளையாட நினைத்தேன். அதன் விளைவே இது' என்ருள்.

'குறும்புக்காரி' எனக்கூறி அடியெடுத்து வைத்தான் அவளருகில். இச்சென்ற ஒலி எத்தனை கிளம்பியதோ?

வீரன் வேல் விழியாளிடம் தோற்ருன் என்பதையும், காமத்திற்கு கள்ளைவிட மயக்கும் சக்தி உண்டு என்பதையும் வள்ளுவர் எவ்வளவு அழகாக தன் ஈரடிப் பாக்களால் விளக்கியுள்ளார் என்பதை நீங்களும் படித்து அனுபவியுங்கள்.

''உண்டார்கண் அல்லது
அடுநறுக் காமம் போல்
கண்டார் மகிழ்செய்தல்
இன்று''

''ஒண்ணுதற் கோஒ
உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணுரும் உட்கும்என்
பீடு''

—இளங்கோவன்.

முல்லை

செப்டம்பர் இதழ் விற்பனையாகிறது!

★ **செங்காந்தள்**

பன்மொழிப்புலவர் அப்பாதுரையார் எழுதிய அற்புதமான குறுநாவல். இனம் கடந்து, மதம் கடந்து எழுந்த காதல் உணர்ச்சிகளின் படப்பிடிப்பு. 17-ம் நூற்றுண்டில் நடந்த வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு எழுந்த காதல் கதை.

★ **இலக்கியம்**

பேரழகி ஒருத்தியின் எண்ண அலைகளை இலக்கியமாகத் தீட்டியிருக்கிருர், பேராசிரியர் **நா. பாண்டுரங்கன்** அவர்கள். அத்தனையும் தத்துவங்கள்! அழகைப்பற்றிய தத்துவங்கள்.

★ **பைராம்கான்**

அக்பரின் அன்பிற்குரிய படைத்தலைவனுக இருந்த பைராம்கானின் இறுதி நாட்களைப் பற்றிய காவியம். **உடுமலை தாமரைச்செல்வன்** தீட்டியிருக்கிருர். சொற்செட்டும் பொருட்செறிவும் காவியத்திற்கு உயிர் கொடுத்து பைராம்கானை மனக்கண் முன்னே கொண்டு வருகின்றன.

★ **இட்லருக்கு நன்றி!**

அழிந்துபட்ட சர்வாதிகாரிகளின் கொள்கைகளை ஆராய்கிருர், தோழர் **மு. சண்முகம்**. இட்லர் முசோலினி ஆகியோரின் சித்தாந்தங்களை ஜனநாயகக் கருத்துக்களோடு மோதவிட்டு படிப்போரைத் திகைக்க வைக்கிருர் ஆசிரியர்.

★ **ஆட்டனத்தி ஆதிமந்தி**

ஆசிரியர் கண்ணதாசன் எழுதிய **ஆட்டனத்தி —ஆதிமந்தி** காதல் காவியம், இந்த இதழில் இடம்பெற்றிருக்கிறது.

மற்றும்

முடியரசன், தங்கப்பா, பி.ஏ., பி.டி., சிந்தாமணி, பி.ஏ., தயானந்தன் பிரான்சிஸ், பி.ஏ. (ஆனர்ஸ்), தென்னரசு, தமிழ்ப்பித்தன், இளஞ்சேரன், இசையமுது ஆகியோர் எழுதியிருக்கிருர்கள்.

96 பக்கங்கள் : விலை அணு எட்டு

முல்லை :: சென்னை-6.

28-9-'57ம் தேதி தென்றலில்...

பன்மொழிப் புலவர்

★ எழுதும் ★

இதுதான் திராவிட நாடு

★ என்னும் ★

தொடர்கட்டுரை ஆரம்பமாகிறது!

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

நாள்தோறும் கிடைக்கும் வருவாயைப் பங்குபோட்டு வல்லரக்கனின் -(அந்த நாய்க்குட்டிக்கு அவர்கள் சூட்டிய செல்லப் பெயர்)- பங்கைக் கொடுத்துவிட்டு மீந்து நிற்பதை அவர்கள் உண்டு மகிழ்வார்கள்.

இரவிலும் பகலிலும், குளிரிலும் வெய்யலிலும் அவர்கள் அந்த இரயிலடியை விட்டுப் பிரிந்ததில்லை. அந்தச் சின்னஞ்சிறு உள்ளங்களிலேதான் எத்தனை கற்பனைக் கோட்டைகள்? ஒரு நாள் நிலவிலே வீரப்பன் படுத்திருந்தான். பக்கத்தில் சிவகாமி உட்கார்ந்திருந்தாள், தாத்தா அவர்களுக்குக் கதை சொல்லிக் கொண்டிருந்தார். மெய்க்காப்பாளன் போல வல்லரக்கன் ஒரு பக்கம் குந்திக்கொண்டிருந்தது. கதையிலே கருத்தைச் செலுத்தாது ஆழ்ந்த யோசனையிலிருந்த வீரப்பனைப் பார்த்து சிவகாமி 'என்ன வீரப்பா, எந்த கோட்டையைப் பிடிக்க...' என்ருள். 'இல்லை சிவகாமி, நம்மளாட்டம் சந்தோசமா இருக்கிறவங்க உலகத்திலே யார் இருக்கிருங்க. அதோபாரு தலைக்குமேலே சர்க்காரிலிருந்து எலக்டிரிக் விளக்கு, பக்கத்திலே காற்றுவீச 'எலக்டிரிக் பேன்', தண்ணீர் குடிக்க குழாய், திருட்டுப் பசங்க தொல்லை தராமல் இருக்க போலீசு, நம்ம கூப்பிட்ட குரலுக்கு ஏன்னு கேட்க வல்லரக்கன், எப்படி நம்ம இராசாங்கம்! இந்த இராசாங்கத்துக்கு நான்தான் இராசா!...' என்ருன். 'அப்போ நானு...' சிவகாமி முடிக்கவில்லை. சொல்லித் தெரியணுமோ...நீதான் என் ராணி...' பொக்கை வாயைத் திறந்து சிரித்தபடியே 'நான் யாராம்...' என்ருர் தாத்தா. நீங்க...நீங்க...' வீரப்பனை முடிக்க விடவில்லை சிவகாமி. 'சக்கரவர்த்தி...' என்ற சிவகாமியின் பேச்சைத் தொடர்ந்து 'ஆமாம் தாத்தா, நம்ப அரசாங்கத்திலே சக்கரவர்த்திதான். இராசாவுக்குக் கப்பம் கட்டணும். அதுதான் சக்கரவர்த்தி தாத்தா பொங்கல் தோறும் வீரப்ப. மகாராஜாவுக்கும் அவர் ராணிக்கும் சொக்காய் பாவாடையெல்லாம் கப்பமாகக் கட்டுருரு...' என்ருன் வீரப்பன். அங்கே ஒரு அரசாங்கத்தை அமைத்த மகிழ்ச்சியிலே அனைவரும் சிரித்தனர்.

தென்றலும் தேனும், இன்பமும் மகிழ்ச்சியும் துணைநின்ற அவர்கள் வாழ்க்கையில் திடீரென்று புயல் கிளம்பியது. ஒருநாள், அப்பொழுதுதான் கிளம்பி ஆடி அசைந்து போய்க்கொண்டிருந்த இந்தோ சிலோன் துரித வண்டியைத் தொடர்ந்து வழக்கம்போல எலும்புத்துண்டுக்காக வல்லரக்கன் ஓடிக்கொண்டிருந்தது. கீழே விழுந்து கிடந்த மணிபர்சைக் குனிந்து எடுத்து அதற்கு உரியவரிடம் கொடுப்பதற்காக நிமிர்ந்தான் வீரப்பன். வண்டியில் பயணம் செய்யும் வனிதாமணியின் கையசைவிலே தன்னை மறந்து நின்ற 'புஷ் கோட்' தன் கையிலிருந்து பர்சு நழுவியதை மறந்துவிட்டு, கையில் பர்சுடன் முன்னல் நின்றுகொண்டிருந்த வீரப்பனுக்குத் திருட்டுப் பட்டம் கட்டி, 'இந்த வயதிலேயே பிக் பாக்கட் அடிக்கிறயா; திருட்டுக் கழுதை' என்று இரைந்தவாறு அவன் கன்னத்தில் படீர், படீர் என்று அடித்தார். பக்கத்தில் நின்ற பீட் போலீசு வரவழைக்கப்பட்டது. அவன் உண்மையைச் சொல்லி 'திருடவில்லை சாமி, நான் ஒரு குற்றமும் செய்யவில்லை சாமி......' என்று கதறினன், துடித்தான், துவண்டான். தாத்தாவும் சிவகாமியும் கெஞ்சினர், அழுதனர். எவ்வளவோ சொல்லிப்பார்த்தனர். அந்த புஷ்கோட்டின் முன்னலே இவர்களின் கதறலும், கண்ணீரும் செயலற்றுப் போயின. வீரப்பன் போலீசு நிலையத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டான். சிவகாமியும், தாத்தாவும் போலீசு நிலையத்தின் வெளியே வல்லரக்கனேடு காவல் இருந்தனர். சட்டத்தையும் சந்தர்ப்பத்தையும் துணையாக்கிக்கொண்டு நீதிமன்றத்திலே நிறுத்தி, 'பிக் பாக்கட்' என்ற பட்டத்தைக் கட்டி இளம் குற்றவாளிகளின் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டான் வீரப்பன். போலீசு வானிலே ஏறும் போது அவன் கதறிய கதறல், அதைப் பார்த்து சிவகாமி 'நானும் வருகிறேன்' என்று அந்த வானிலே தலையை மோதிக்கொண்ட காட்சி, 'போடீ கழுதை! இந்த வயசிலேயே காதலோ' என்று ஏளனம் பேசி போலீசார் அவளை இழுத்துத் தள்ளிய கொடுமை, அதைப் பார்த்துத் தாங்க முடியாத சோகத்தால் கண்ணீர் வடித்த தாத்தா, இதையெல்லாம் கண்டு ஏதோ நடக்கக் கூடாதது நடப்பதாக நினைத்து முனகிக்கொண்டிருந்த வல்லரக்கன்...அந்த சோகம் கப்பிய நிகழ்ச்சி, கல் மனத்தையும் கலங்க வைக்கும். வீரப்பனை ஏற்றிக்கொண்டு போலீசு வான் பறந்தது. துன்பத்தைத் தாங்கும் சக்தியற்ற அந்த ஏழைச் சிறுமியின் இதயம் வெடித்து விடும்போலிருந்தது. ஏதோ ஒரு நாள் வண்டியினுள் பிச்சை வாங்க ஏறியவன் இறங்குவதற்குள் பச்சைக் கொடி காட்டிவிட்டதால் இறங்க முடியாமல் அடுத்த நிலையம் போய்விட்டான் வீரப்பன். மறுநாள் அவன் வருவதுவரை ஒன்றும் சாப்பிடாமல், உறங்காமல் காத்திருந்தாள் சிவகாமி. அந்த ஒரு நாள் பிரிவையே தாங்க முடியாத அந்தப் பிஞ்சு உள்ளம் இந்த நிரந்தரப் பிரிவை எப்படித் தாங்கும்?

நாட்கள் உதிர்ந்தன. மாதங்கள் பறந்தன...காலம் எழுப்பிய சாவு என்னும் சூருவளியிலே அமிழ்ந்து போனர் தாத்தா...வண்டியிலே நாள்தோறும் வரும் கருப்பையாவும் இப்போது வருவதில்லை. ஆனல் காரைக்குடிப் புகைவண்டி நிலையத்தில் இப்பொழுதும் ஒரு சிறு பெண், அந்த நொண்டி நாய் வல்லரக்கன்—பின்தொடர... வீரப்பன் வருவான், வந்திடுவான்... என்னைவிட்டு எங்கும் போகமாட்டான்...தாத்தா அவனைக் கூட்டிக்கினு வரேன்னு சொல்லியிருக்காரு வல்லரக்கா, அவன் திருடவில்லை அப்படித்தானே ... என்றெல்லாம் புலம்பிக்கொண்டு நடப்பதைப் பார்க்கலாம்.

அன்பு ஆட்சி செய்த அந்தக் குடும்பம் சிதறியது. பாசத்தால் கட்டுண்ட அவர் உள்ளம் உடைந்தது. அங்கே வந்து செல்லும் மாணவர்களின் அன்பில்தான் இப்பொழுது வல்லரக்கனும் சிவகாமியும் வாழ்கிருர்கள். இல்லை, இல்லை, உயிரைப் பிடித்துக்கொண்டு பைத்தியமாக உலவுகின்ருர்கள். நீங்கள் வேண்டுமானல் 'உன் கதையைப் படித்தேன்' என்று அவளிடம் சொல்லிப் பாருங்களேன்! ஒரு சிரிப்பு...அதன் பிறகு ஒரு அழுகை ...அதோ வீரப்பன் வந்துவிட்டான் என்று ஒரு கூச்சல்-இதைத் தவிர அந்த ஏழைச் சிறுமியிடமிருந்து நீங்கள் எதையும் எதிர்பார்க்க முடியாது. அவளுக்கு உயிர், சொத்து, சுகம் எல்லாம் அந்த நொண்டி நாய் வல்லரக்கன்தான்!

-நாஞ்சில் அன்பெழில்

விரைவில் ஆரம்பமாகிறது!

தென்றலில்

ம. கி. தசரதன், எம். ஏ.

எழுதும்

தொடர் கதை

பாதி பாதி!

இன்னும் மூன்று வருடத்தில் காங்கிரஸ் கட்சி உடைந்து விடும்.

-ஜெயப்பிரகாஷ் நாராயண்.

இனிமேலா உடையப் போகிறது? அது உடைந்து நெடுநாட்கள் ஆகிவிட்டனவே!

-விஷயம் தெரிந்தவர்.

★

சென்னையில், கடல் அரிப்பைத் தடுக்க, கடல் ஓரமாக 3 ஆயிரம் அடி நீளத்துக்குச் சுவர் கட்டவேண்டும் என்ற திட்டத்தை நிறைவேற்ற, சம்பந்தப்பட்டவர்கள் காமராசரை சந்தித்தனர்.

-செய்தி.

தயவு செய்து இதுபற்றி முதலமைச்சரை மட்டும் சந்திக்க வேண்டாம்; அவர் இந்தப் பிரச்சினைக்கே 'சுவர்' வைத்து விடுவார்!

-பொதுமக்கள்.

★

என்க்குச் சினிமா பார்க்க ரொம்ப ஆசை.

-பக்தவத்சலம்.

நல்ல வேளை! எங்கே நடிப்பதற்கு ஆசை என்று சொல்லி விட்டார்களோ என்று பயந்து விட்டேன்!

-மாஜி நடிகர்.

★

'தமிழ்நாடு' என்று பெயர் வைக்கவேண்டுமா? அது காங்கிரசால்தான் முடியும்.

-சி. சுப்ரமணியம்.

உங்களால் அது மட்டும்தானு முடியும்? நாட்டைச் சுடுகாடாக மாற்றக்கூட உங்களால் முடியுமே!

-விஷயம் தெரிந்தவர்.

★

பெரியார், இன்று நேரு பட எரிப்பு என்கிருர், நாளை காமராசர் பட எரிப்பு என்பார்.

-சி. சுப்ரமணியம்.

நாளைய மறுதினம் சி. சுப்ரமணியம் பட எரிப்பு என்று சொன்னல்கூட ஆச்சரியமில்லை.

-ஒரு தி. க.

★

காங்கிரஸ் கட்சித்தலைவர் பதவியிலிருந்து ராஜினமா செய்ய நான் தயார்.

-தேபர்.

பொய் சொன்னலும் பொருந்த சொல்லவேண்டும்!

-பழமொழி

★

அ. இ. காங்கிரஸ் கட்சி ஓர் ரகசியக கூட்டம் கூட்டியது. அரிசி விலையைக் குறைப்பதற்கான வழிகள் பற்றி அப்போது பேசப்பட்டது.

-செய்தி.

அவர்களிலும் அரிசி [illegible] கள் உண்டோ?

-ஒரு சந்தேகப் பேர்வழி



3. கொந்தளிக்கும் மக்கள் குணம்.

பஞ்சமும் பட்டினியும் பாட்டாளிக் கண்ணீரும்
கொஞ்சமோ இந்தக் குடியரசில்-அஞ்சுகமே
சிந்திந்தே ஆளவந்தோர் சீராக்கம் தேடாரேல்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.
—பி. கே. கஸ்தூரிபாய், சென்னை-7.

பண்டைநம் வேங்கடமும் பண்பார் திருத்தணியும்
நீண்ட இடமாம் நெடுமலையும்-மீண்டிடுமோ ?
சொந்தமுள நம்தமிழர் சொத்துக்கள் இல்லையெனில்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.
— ரே. சீனிவாசன், சொக்கலிங்கபுரம்

வற்று வளம்பெருக்கி வாடுமவர் துன்புழக்கிக்
கற்றுரைப் போற்றிக் கவின்விளைக்கும்-கொற்றவனும்
சிந்தையது கெட்டுச் செயல்முறையில் மாறுவனேல்
கொந்தளிக்கும் மக்கள் குணம்,
—வித்துவான்-கி. வேணுபால், கோர்க்காடு

தாய்க்குப் பழிநேரின் தாய்மொழிக் கேச்சுவரின்
வாய்மை வகையழியின் வாழுரிமை-போயொழியின்
சிந்தை மிகநொந்து சீறி எரிமலைபோற்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.
—சி. சிவராமலிங்கம், சென்னை-1

மக்கள் துயர்துடைக்க மந்திரிக்குத் துப்பில்லை
தக்கோரைக் கோடத் தகுதியில்லை-முக்கியமாய்
சொந்தபுத்தி தானில்லை சொல்லியு மில்லையெனில்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.
—பழனி ராதா, கும்பகோணம்

நச்சாம் அணுக்குண்டை நம்பியே நாடாளும்
இச்சை மிகக்கொண்ட இவ்வுலகில்-அச்சத்தால்
சிந்தை மிகநொந்து செய்வ தறியாது
கொந்தளிக்கும் மக்கள் குணம்.
— ந. அ. பகவதி, கன்னியாகுமரி

தாய்த்திரு நாட்டைத் தமிழ்நா டெனவழைத்தால்
சேயின் தலையினையா தீய்த்திடுவர் !-ஏய்த்துவரும்
மந்திரிகள் ஆட்சியினி மங்கட்டும் ! இல்லையேற்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.
— அ. தமிழரசி, மம்சாபுரம்

பஞ்சம் பிணியோடு பட்டினியும் பாமரரைத்
தஞ்சம் புகுந்து தவிக்கவிட-மஞ்சத்தில்
வந்திருப்போர் வெங்கொடுமை வேரறுக்க மாட்டாரேல்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.
—இ. இராமன், கன்னியாகுமரி

கத்துங் கடல்மூழ்கி முத்தெடுத்த தென்தமிழர்
செத்து மடிகின்றர் சிங்களத்தில்-புத்தியின்றி
தொந்திமிகு மந்திரிகள் தூங்கும் நிலைகண்டால்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.
—ஆரூர். நக்கீரன், திருவையாறு

சொந்தமொழி செந்தமிழ்சீர் சந்ததமும் வாழ்ந்திருக்க
வந்தமொழி இந்திதனை வாழவிடத்-தந்திரமாய்
மந்திரிகள் சந்துவழி முந்துவரேல் ஆழ்கடலாய்க்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.
—ஆ. வி. நாதன், சூளைமேடு

வரிமேல் வரிபோட்டு வாழ்பவரை வாட்டிப்
புரியா மொழியும் புகுத்தி,-அரியணையோர்,
சொந்த வுரிமைக்கும் சூழ்வேலி போட்டுவிடின்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.
—சா. ரிச்சர்ட்லேட், நாம[redacted]

வஞ்சம் வரிச்சுமை வாழா மொழிச்சுமையும்
நெஞ்சில் பளுவேற்ற நெக்குருகும்-பஞ்சையரின்
கண்கலக்கம் கண்டும் கயவர் உணராரேல்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.
பனை. சண்முகம், நெற்குப்பை

சங்கமெனுந் தொட்டிலிலே தாலாட்டித் தென்திசையின்
திங்கட் குலன்காத்த செந்தமிழே !-எங்கிருந்தோ
வந்தஇந்தி ஆட்சிசெய வாளாது நீயிருந்தால்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.
—சு. வீ. வரதராசன், சென்னை-23

மண்டும் புகழ்தேடி மந்திரிமார் சுற்றுவதால்
கொண்ட துயர்களையார் கோகிலமே !-மண்டிலத்தைக்
குந்தி அரசாண்டும் கொள்கை பிறழ்ந்தக்கால்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.
—கமலா, சென்னை-11

கன்னித் தமிழ்நாட்டில் கட்டாய மாய்இந்தி
தன்னைப் புகுத்துவரேல், தாய்மொழிக்கு-சென்னைநகர்
சிந்துமடா செங்குருதி செந்தமிழா ! நாடெல்லாம்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.
—வி. ப. கோவிந்தசாமி, வியாசர்பாடி

நாயென் றவரை நவின்றிடினும் ஈன்றிட்ட
தாயைப் பழித்திடினுந் தாஞ்சகித்து-தாய்மொழியாஞ்
செந்தமிழை இகழ்ந்துரைப்பின் சீறி எழுந்திடலே
கொந்தளிக்கும் மக்கள் குணம்.
—அமரன், திருவாரூர்

நாட்டில் விலைவாசி நாள்தோறும் ஏறுவதால்
பாட்டாளி மக்கள் பதைக்கின்றர்-ஆட்சிசெய
வந்தவர்கள் மேலும் வரிவிதித்தால் நாடெங்கும்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.
—சி. பி. சாமி, அரக்கோணம்

எம்மொழியும் தாராத இன்சுவையை இன்னமுதாம்
நம்மொழியில் கண்டிட்டார் நல்லறிஞர்-நம்நாட்டில்
செந்தமிழை நாடாளச் செய்திட்டால் காணுதே
கொந்தளிக்கும் மக்கள் குணம்.
—இரா. சந்தானம், சேலம்

நாடாளும் நல்லுழவர் காலமெலாம் கண்கலங்க
நாடாள்வோர் என்றும் நலமிகவே-வாடாமல்
நிந்தை பலபேசி நீளுலகில் வாழ்ந்திட்டால்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.
—ஆபன், காடல்குடி

ஆலை வடக்கே அணைக்கட்டும் அங்கேயே
வேலையிலாத் திண்டாட்ட வெங்கொடுமை-சோலைமிகு
செந்தமிழ்சீர் நன்னாட்டில்; சற்றேனும் சிந்தித்தால்
கொந்தளிக்கும் மக்கள் குணம்.
—ந. அலி, திருச்சி

நாடு பிரிவதுதான் நந்தமிழர் வாழ்வுக்குப்
பீடு தருமெனநாம் பேசுவதை-ஓடிநிதம்
நிந்திக்கும் ஆட்சியினை நிச்சயமாய் மாற்றிடுமே
கொந்தளிக்கும் மக்கள் குணம்.
—சோ. கண்ணப்பன், பேரூர்

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.